
தாய் நிலம் பதிப்பகம்

# தாய் நிலம்



ஆவணி | விலை: 100/- | இதழ் : 01

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தாய்நிலம் பதிப்பகம்
THAAINILAM PUBLICATION (PVT) LTD
T.P.No. 0212217780 Hot Line:- 0705000033
Email:- thaainilamnews@gmail.com Web:- www.Thaainilampublications.com

தாய்நிலம் பதிப்பகம்
இல.38, கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.

ThaaiNilam Publications
No.38, Kachcheri Nallur Road,
Jaffna.


# ஆசிரியர் குறிப்பு

தாய்நிலம் இந்த சஞ்சிகையானது தாய்நிலம் பதிப்பகத்தினால் வெளியிடப்படுகின்றது. இந்த நிறுவனம் இலங்கை கம்பனிச்சட்டத்தின் கீழ் ஒரு தனியார் நிறுவனமாக பதியப்பட்டது. இலக்கியச் செயற்பாடுகளையும் அறிவியல் ஆய்வுகளையும் வெளியிடும் நோக்கில் உருவாக்கப்பட்டதே தாய்நிலம் பதிப்பகம் ஆகும். எந்தவித அரசியல் பின்புலங்களோ பின்னூட்டங்களோ இன்றி தனிமனித முயற்சியால் பொதுச்சிந்தனை நோக்கில் உருவாக்கப்பட்டுள்ளது.

தய்நிலம் பதிப்பகத்தின் பணிகளாக எழுத்தாளர்கள், ஆய்வாளர்களின் தரமான படைப்புக்களை மதிப்பீட்டுக் குழுவின் அங்கீகரத்துடன் வெளியிடுவது மற்றும் சமூகத்தில் வாசிப்பு பழக்கத்தினை அதிகரிக்கும் நோக்கில் சஞ்சிகைகளை வெளியிடுவது, நூல்கண்காட்சிகளை நடத்துவது என இதன் செயற்பாடுகள் அமைந்திருக்கும். ஒரு தனியார் நிறுவனமாக இருந்தாலும் இதன் செயற்பாடுகள் சமூக நலனை முதன்மையாகக் கொண்டு செயற்படும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

வடமாகாணத்தில் பதிப்பகங்களின் உருவாக்கம் சர்வதேச தரத்தில் மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற நோக்கில் இந்த நிறுவனம் உருவாக்கப்பட்டுள்ளது. இதனால் வெளியிடப்படுகின்ற 'தாய்நிலம்' என்ற சஞ்சிகையானது பல்சுவை இதழாக வெளியிடுவதே எமது நோக்கமாகும். வாசகர்களின் ஆதரவினைப் பொறுத்து இதனை மாதாந்த சஞ்சிகையாக வெளியிடுவதற்கு எண்ணியுள்ளோம். இன்றைய உலகம் வணிகமயப்பட்டது. பொதுக் கட்டமைப்பின் மூலம் செயற்படுத்தும் சில விடயங்களை தனியார் கட்டமைப்பின் மூலம் இலகுவாக செயற்படுத்தலாம். உதாரணமாக பதிப்புத்துறை மற்றும் வெளியீட்டுத்துறை என்பது பெரும் பண முதலீட்டுடன் தொடர்புடையது. வணிகத்துறையில் ஏனைய செயற்பாட்டுக்கு கிடைக்கும் முதலீடுகளை விட இந்த செயற்பாட்டுக்கு முதலீடு என்பது மிகச் சொற்ப அளவிலேயே கிடைக்கின்றது. முதலீட்டாளர்கள் இத்துறையில் முதலீடுவதற்கு பின்னிற்கிறார்கள். இந்த சாவாலான ஒரு தளத்தின் இயல்பு நிலையினை புரிந்துதான் இந்த செயற்பாட்டில் இறங்கியுள்ளோம். இலங்கையில் பதிப்புத்துறை என்பது பின்தங்கிய நிலையிலேயே உள்ளது. காரணம் இதற்கான சந்தை வாய்ப்புக்கள் மிகக் குறைவாகவே உள்ளன. எனவே இந்த தளத்தினை மாற்றி சந்தை வாய்ப்புக்களை அதிகரிக்கச் செய்யும் செயற்பாடுகளை எமது நிறுவனம் மேற்கொள்ள உள்ளது.

இலங்கையில் சஞ்சிகை முயற்சிகள் என்பது மிகச்சொற்ப அளவிலேயே உள்ளது. அதிலும் இலக்கியச் சஞ்சிகைகளே அதிகம் உள்ளன. அவற்றின் விற்பனை என்பது மிகக் குறைந்த அளவிலேயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடைபெறுகின்றது. ஒரு சஞ்சிகை ஆசிரியர் சஞ்சிகை வெளியீட்டிற்காக செலவழிக்கும் தொகையினை மீளப் பெறுவது என்பது சவாலான விடயமாகவே உள்ளது. காரணம் சந்தை வாய்ப்புக்கள் இல்லை. இத்தனை சவால்களுக்கு மத்தியில் நாமும் சஞ்சிகை வெளியீட்டினை தொடங்கியுள்ளோம். மிகத்துல்லியமான விற்பனைச் செயற் பாட்டினை மேற்கொள்வதன் ஊடாக இதனை சாத்தியமாக்கலாம். அதற்கு மக்கள் வாசிக்க விரும்பும் விடயங்களை கொண்டுவரவேண்டும். மக்களை வாசிக் கத்தூண்ட வேண்டும் என்ற இரண்டு விடயங்களையும் தாய்நிலம் செய்ய இருக்கின்றது.

இச்சஞ்சிகைக்கு பல்சுவையான ஆக் கங்கள் எதிர்பார்க்கப்படுகின்றது. இன ஐக்கியத்தியத்தினை பேணுவதோடு எமது அடையாளங்களையும் எமது பண்பாடுகளையும் பாதுகாத்து அதனை அடுத்த தலைமுறைக்கு வழங்கும் நோக் கத்தினையுமே இச்சஞ்சிகை கொண் டிருக்கின்றது. பண்பாட்டு பிறழ்வுகளை ஏற்படுத்தும் மிக மலினமான விடயங்களை எழுதி மக்கள் மத்தியில் சலசலப்பினை ஏற்படுத்துவது எமது நோக்கமல்ல அமை தியான முறையில் அநீதிக்கெதிரான எமது கோப்பத்தினை எழுத்து மூலமாக முன்வைப்பதும் அதற்கான தீர்வுகள் கிடைக்கும் வரை தொடர்ந்து முயற்சிப்பதும் எமது நோக்கமாகும்.

இந்த சஞ்சிகை ஒரு ஆசிரியர் குழு மத்தினால் இயக்கப்படுகின்றது. சஞ்சி கைத்துறையில் அனுபவம் வாய்ந்த ஆசி ரியர்களின் அனுபவங்களையும் அவர் களின் ஆலோசனைகளையும் உள் வாங்கி இதன் எதிர்கால செயற்பாடுகள் அமையும். இலக்கிய உலகில் எந்த வொரு அணியினையோ குழுமத்தினையோ சாராது அனைத்து இலக்கிய குழமங் களோடும் சேர்ந்து இயங்க இருக்கின்றது. இது ஒரு இலக்கிய சஞ்சிகை அல்ல மக் களுக்கன நல்ல விடயங்களை கொண்டு செல்லும் ஒரு பல்சுவை சஞ்சிகை. மென் மையான வாசிப்புக்கு ஏற்றவாறு நீண்ட கடினமாக வாசிப்பினை கொண்டிராமல் குறகிய நேர வாசிப்பிற்கு ஏற்றவாறு இது அமைந்திருக்கும்.

இச்சஞ்சிகை வெறுமனே இலாப நோக்கிற்காக அன்றி மக்களிடம் வாசிப்பு ஆர்வத்தினை தூண்டும் முகமாகவே இது வெளியிடப்படுகின்றது. இந்த சஞ்சிகையின் விற்பனையில் கிடைக்கின்ற வருமானத்தில் இருபத்தைந்து வீதம் வறிய மாணவர்களின் கற்றல் நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தப்படும். வறிய நிலையில் உள்ள இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பினை ஏற்படுத்தி அவர்களின் வாழ்வாதாரத்தினை மேம்படையச் செய்யவும் இச்சஞ்சிகை துணை நிற்கிறது. எனவே சஞ்சிகை வெளியீடு என்பது மற்றவர்கள் செய்கிறார் கள் நாமும் செய்ய வேண்டும் என்ற கௌரவத்திற்காக அல்ல பல காலமாக திட்டமிட்டு வந்து இப்போதுதான் செயல் வடிவம் கண்டிருக்கிறது. இது யாரை யும் தாக்குவதற்காகவோ பாதிப்படையச் செயற்வதற்காகவோ அல்ல அனைவரு டனும் ஒன்றிணைந்து பயணிக்கவே தாய்நிலம் விரும்புகின்றது. இலங்கையில் உள்ள தமிழ்ச்சூழலில் ஒன்றித்து பய ணித்தால்தான் இலக்குகளை தொட முடியும். மக்களினதும் வாசகர்களினதும் ஆதரவினை தொடர்ந்து எதிர்பார்க்கின் றோம். ஒவ்வொருவரும் இதற்காக வழங் கும் ஒரு சிறுதொகை பாரிய மாற்றத்தினை மாற்றத்தினை ஏற்படுத்தும். உங்கள் பங்களிப்புதான் இச்சஞ்சிகை தொடர்ந்து பயணிப்பதற்கு உதவும். மொழியையும் மொழிப்பயன்பாட்டையும் பாதுகாத்து எமது இருப்பின் மீதான விருப்பினை வெளிப்படுத்துவோம்.


**ஆசிரியர்குழு**
**தாய்நிலம் சஞ்சிகை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தண்ணீருக்காய்
# தவிக்கும் உலகம்

மு.தமிழ்ச்செல்வன்
கிளிநொச்சி.




புவியானது 30 வீதம் நிலமும், 70 வீதம் நீரும் கொண்டமைந்தது. இந்த 70 வீத நீரில் 97 வீதம் உவர் நீராகவும், எஞ்சிய 3 வீதம் நன்னீராகவும் காணப்படுகிறது. இந்த நன்னீரில் 79 வீதம் பனிப்பாறைகளாகவும், பனிக்கட்டிகளாகவும், 20 வீதம் நிலத்தடி நீராகவும் காணப்படுகிறது. இதில் மிஞ்சிய 1 வீதம் மட்டுமே உலகில் வாழ்கின்ற சுமார் 8 பில்லியன் மக்கள் இலகுவாக பயன் படுத்தக் கூடியதாக உள்ளது.

இது ஆச்சிரியமான புள்ளிவிபரம். உலகில் வாழ்கின்ற 8 பில்லியன் மக்கள் இலகுவாக பயன்படுத்துகின்ற நீரின் அளவு 1 வீதம் என்பது எம்மில் எத்தனை பேருக்கு தெரியும் என்பது தெரியாதது. ஆனால் நாம் தெரிந்தோ, தெரியாமலோ தண்ணீர் தொடர்பில் பொறுப்பின்றியும், நீர் முகாமைத்துவத்தை கடைப்பிடிக் காதவர்களும் இன்றும் வாழ்ந்துக் கொண்டிகின்றோம்.

இற்றைக்கு ஒரு முப்பது வருடங்களுக்கு முன் எனது அப்பாவிடம் சென்று நீங்கள் எதிர்காலத்தில் தண்ணீரை பணம் கொடுத்து வாங்குவீர்கள் , தண்ணீரை விற்பனை செய்யும் கடைகள் ஏராளம் உருவாகும், தண்ணீர் ஒரு மிகப்பெரும் விற்பனை பொருளாக மாறும் எனத் தெரிவித்திருந்தால் அவர் என்னை ஒரு மனநலம் பாதிக்கப்பட்ட மகனாகவே பார்த்திருப்பார். ஏன்னெனில் கப்பியும், கயிறும் இன்றி தங்களது தண்ணீர்த் தேவையினை பூர்த்தி செய்த அவர்கள் அப்படிதான் பார்ப்பார்கள். அப்பாவின் இளமை காலத்தில் நிலத்தடி நீர் சுமார் 20 அடி ஆழத்திற்குள் காணப்பட்டது.


ஆனால் இந்த முப்பது வருடத்திற்குள் நீர் தொடர்பில் நாம் எதிர்பார்க்காத பல விடயங்கள் நடந்தேறியிருக்கிறது. நடந்துகொண்டும் இருக்கிறது. இன்று தண்ணீர் சந்தையில் பல மில்லியன்கள் ரூபாக்கள் புரள்கிறது. அந்தளவுக்கு கொள்வனவு விற்பனை இடம்பெறுகிறது.

இதேவேளை உலகில் வாழ்கின்ற மக்கள் தொகையில் மூன்றில் ஒரு பகுதியினர் அதிகளவு தண்ணீர் நெருக்கடி உள்ள நாடுகளில் வாழ்கின்றனர். அமெரிக்காவைச் சேர்ந்த உலக நீராதார நிலையத்தின் தகவல்களின் படி 2025 ஆண்டின் போது சுமார் 300 கோடிக்கு அதிகமான மக்கள் தண்ணீர் பற்றாக்குறையால் பாதிக்கப்படுவார்கள் என தெரிவித்துள்ளது. இதேவேளை சுமார் 70 கோடி மக்கள் வறட்சியால் இடம்பெயர்ந்து செல்வார்கள் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதேவேளை பனிப்பாறைகளும் வேகமாக உருக தொடர்ங்கியுள்ளன. இதன் காரணமாக துருவ பகுதிகளின் நன்னீரும் குறைவடைய தொடங்கியுள்ளது. இவ்வருட ஆரம்பத்தில் அந்தாட்டிக்காவிலிருந்து பிரிந்து சென்று கடலில் நகர்ந்துகொண்டிருக்கின்ற யு23ய என்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





பனிப்பறையானது சிங்கபூர், பஹ்ரைன் போன்ற 29 நாடுகளின் பரப்பளவை விடவும் பெரிய பனிப்பாறையே கடலில் நகர்ந்து உருகிவருகிறது. இதனை விஞ்ஞானிகள் அழிவின் நகர்வு என்று அழைக்கின்றனர். கால நிலை மாற்றத்தின் விளைவாக இந் நிலை ஏற்பட்டுள்ளது. இதுவும் உலகின் நன்னீனர் வளத்திற்கு பெரும் ஆபத்தானது. கலிபோர்னியா அறிவியல் அக்கடமியின் ஆய்வுகளின் படி தன்சானியாவின் கிளிமஞ்சாரரோ மலையை மூடி நிற்கும் பனியும் 2050 ஆம் ஆண்டளவில் உருகி இல்லாமல் போய்விடும் எனத் தெரிவித்துள்ளது.

இவ்வாறு உலகின் நன்னீர் வளம் ஆபத்தை எதிர்கொண்டு செல்கிறது. இந்த நிலைமையானது உலக உயிரினத்திற்கே விடுக்கப்பட்டிருக்கும் சவலாகும். 1995 இற்குப் பின்பு புவியின் வெப்பம் பெருமளவுக்கு அதிகரித்து வருகிறது. புவியின் சாதாரண வெப்ப அளவின் விகிதம் பெருமளவுக்கு கூடியிருக்கிறது. கரியமிலவாயு, ஓசோன் மண்டலத்தாக்கம், மீதேன், நைட்ரஸ் ஒக்சைட் என்பவற்றோடு காடுகளை அழிப்பதும் எரிபொருட்களின் வெப்ப நிலை என்பன புவியின் வெப்பம் அதிகரிப்பதற்கு காரணங்களாக அமைகின்றன.

நான்கு இலட்சம் ஆண்டுகளாக இல்லாத அளவுக்கு புவியில் காபனீரொட்சைட் அதிகரித்திருக்கிறது. இதற்குக் காரணம் தொழிற்சாலைகள் என ஆய்வுகள் கூறுகின்றன. இந்தக் கரியமில வாயுவினால் புவிக்கும், சூரியனுக்கும் இடையே உள்ள மிலன்கோவிட்ச் வலயம் பாதிப்படையும். அதன் விளைவு துருவப் பனி வேகமாக உருகும். இதனால் துருவ நன்னீர் வளம் குறைவடையும்.

மேலும் சுற்றுப்புறச் சூழல் சீர்கேடு காரணமாக முன்னைய காலங்களைப் போலன்றி அமில மழை அடிக்கடி பெய்து வருகிறது. அமெரிக்கா, கனடா போன்ற நாடுகளில் இந்த அமில மழை காரணமாக நன்னீர் ஏரிகள் பாதிப்படைந்துள்ளதாகக் கூறப்படுகிறது. அமில மழை அடிக்கடி பெய்து வந்தால் காலப் போக்கில் நன்னீர் ஏரிகள் அதன் நன்னீர் தன்மையை இழந்து விடலாம் என்ற அச்சம் தற்போது தலைதூக்கியுள்ளது. ஜேர்மனி, ஸ்கன்டினேவிய நாடுகளில் பெய்த அமில மழை காரணமாக காடுகளிலுள்ள மரங்களின் இலைகள் ஏன் வேர்கள் கூட அழிந்திருக்கின்றன. இதன் விளைவுகள் கூட நிலத்தடி நீரைப் பாதிக்கின்றன.

உலக நீர் வளத்தில்





இன்று பூமியில் நிலவுகின்ற நிலையற்ற வானிலை காரணமாக சில இடங்களில் அதிக மழையும், வேறு சில இடங்களில் வறட்சியும் நிலவி வருகிறது.

மேலும் புவி வாழ் மக்களின் மூன்றில் ஒரு பகுதியினர் கரையோரப் பிரதேசத்தில் வாழ்கின்றனர். ஆனால் இக்கரையோரப் பிரதேசங்களில்தான் நிலத்தடி நீர் பெருமளவுக்கு வெளியேறி வருகிறது. அத்தோடு கரையோர நன்னீர் வளம் உவர்நீராகவும் மாறி வருகிறது. இந்நிலையில் அதிகளவு நீர்ப்பயன்பாடு உள்ள கரையோரப் பிரதேசங்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




நன்னீர் வளம் அருகி வருகின்றமையால் எதிர்காலத்தில் இப்பிரதேச மக்கள் தங்களது நீர்த்தேவையினை முற்றுமுழுதாக இறக்குமதி செய்வதன் மூலமே நிறைவேற்றிக்கொள்ள வேண்டிய இக்கட்டான நிலை உருவாகும்.

எனவேதான் உலகின் நீர் நெருக்கடி நிலைமையினை கருத்தில் எடுத்து பல உலக நாடுகள் பல முன்னோடி நடவடிக்கைகளில் இறங்கியுள்ளன.

அந்த வகையில் முதலாவதாக அண்மையில் ஆட்டிக் பிராந்திய மலை முகடுகளுக்கு ரஷ்யா உரிமை கோரியதும் அதனால் ரஷ்ய எதிர்ப்பு நாடுகள் சீற்றமடைந்தமையையும் கவனத்தில் கொள்ளலாம். அதாவது ஆட்டிக் சமுத்திரத்திலுள்ள மலைப் பகுதிகள் ரஷ்யாவின் ஒரு பகுதி என அந்நாட்டு ஆய்வுக்குழு தெரிவித்த கருத்திற்கு அமெரிக்காஇ கனடாஇ டென்மார்க் போன்ற நாடுகள் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளமையோடு ரஷ்யாவின் செயற்பாட்டினை அமெரிக்கா ஒரு ஆக்கிரமிப்பு நடவடிக்கையாக சித்தரித்துள்ளமையும் இரண்டு நாடுகளிடையே பரஸ்பர கருத்து முரண்பாட்டிற்கும் கொண்டு சென்றிருக்கின்றன.

இப்பிரதேசக் கடலில் 1இ0000 பில்லியன் தொன் எரிபொருள் இருப்பதாக ஆய்வுகள் கூறுகின்றன. அத்தோடு அதன் மலைப் பகுதிகளிலிருந்து தூய்மையான குடிநீரையும் பெற்றுக்கொள்ளலாம். ஒரு காலத்தில் நீர் பற்றாக்குறை ஏற்படும் பட்சத்தில் இப்பிராந்தியத்திலிருந்து குழாய் வழி மூலம் ரஷ்யாவுக்கு தூய குடிநீரைப் பெற்றுக்கொள்ள முடியும்.

கடல்நீரைக் குடிநீராக மாற்றுவதிலும் பார்க்க இதில் பல்வேறு நன்மைகள் உண்டு. இதனாலேயே ரஷ்யா ஆட்டிக் பிராந்தியத்தை தனது கட்டுப்பாட்டில் கொண்டு வரும் முயற்சியில் இறங்கியுள்ளது. அமெரிக்காவின் அழுத்தங்களையும் பொருட்படுத்தாது ரஷ்யா மீண்டும் மீண்டும் லொமனோசோவ் மலைத்தொடர் தனது நிலப்பரப்பின் ஒரு பகுதியென வாதிட்டு வருகிறது. இதனைவிடக் கடந்த மாதம் அவுஸ்திரேலிய இயற்கை வள அமைச்சைச் சேர்ந்த குழுவினர் முதன் முதலாக விமான மூலம் அந்தாட்டிக்கா சென்று அங்குள்ள நிலைமைகளை ஆய்வு செய்து திரும்பியமையும் உலகத்தின் கவனத்தை ஈர்த்துள்ளது. அவுஸ்திரேலியாவின் இந்தப் பயணத்தை சில நாடுகள் தேவையற்ற பயணம் எனவும் விமர்சித்துள்ளன.

அடுத்து முக்கியமாக நீரை ஆக்கிரமிக்கும் உலகின் திட்டத்தின் வடிவமாக காட்ஸ் ஒப்பந்தம் பார்க்கப்படுகிறது. இவ் ஒப்பந்தம் ஒரு நாடு தமது துறைகளைப் பன்னாட்டு நிறுவனங்களுக்குத் திறந்து விடுவது பற்றிக் கூறுகிறது. அதில் முக்கியமாகத் தண்ணீரை தனியார் மயமாக்குவதில் தீவிர கவனம் செலுத்துகிறது காட்ஸ் ஒப்பந்தம் பெருமளவுக்கு வளமிக்க ஏழை நாடுகளை இலக்காகக் கொண்டு உருவாக்கப்பட்டிருக்கிறது. இதன்படி இவ் வளமிக்க ஏழை நாடுகள் தங்களது துறைகளைப் பன்னாட்டு நிறுவனங்களுக்குத் திறந்துவிட மறுக்கும் சந்தர்ப்பங்களில் அவை வல்லரசுகளின் மிரட்டல்களையும், பொருளாதாரத் தடைகளையும் எதிர்கொள்ள வேண்டிவரும். இவ்வாறான நிலைமைகள் நாடுகளிடையே பரஸ்பர நல்லுறவைச் சீர்குலைக்கும். இதனால் வளமுள்ள வலுவற்ற நாடுகள் வல்லரசுகளின் அழுத்தங்களை எதிர்கொள்ள அணிசேர முற்படும் இந் நிலைமை உலக அமைதிக்கு மேலும் கேடு விளைவிப் பதாக அமையும்.

தண்ணீரை விழுங்கும் காட்ஸ் ஒப்பந்தத்தில் தண்ணீர் தொடர்பான பல சரத்துக்கள் உள்ளடக்கப்பட்டிருக்கிறது. அவற்றில் சில,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. தண்ணீர் இயற்கையின் கொடை என்பதனையோ, மனிதனின் அடிப்படை உரிமை என்பதனையோ காட்ஸ் ஏற்கவில்லை. இதன்படி தண்ணீர் ஒரு விற்பனைச் சரக்கு.

குடிநீர் விநியோகம் காசு கொடுப்பவர்களுக்கு மட்டும் வழங்கப்படும் சேவை எனவும் பன்னாட்டு முதலாளிகள் இதில் முதலீடு செய்தால் அவர்களுக்கு இலாபம் ஈட்டும் உரிமையுண்டு. தண்ணீரின் விலையை நிர்ணயிப்பதில் ஒரு நாட்டு அரசு எந்த விதத் திலும் குறுக்கிட முடியாது.

2. தன்னுடைய வர்த்தகத்தை வளர்க்கும் நோக்கில் ஒரு பன்னாட்டு நிறுவனம் நாட்டின் ஒரு பகுதியிலிருந்து மற்றொரு பகுதிக்கு தண்ணீரைக் கொண்டு செல்லலாம். அத்தோடு வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியும் செய்யலாம். இதற்கு அரசுகள் தடை விதிக்க முடியாது.

3. நிலத்தடி நீர் வற்றுவது, சுற்றுச் சூழல், உயிரியல் சூழல், கலாச்சாரம் என எந்தவிதக் காரணத்திற்காகவும் தண்ணீர் விற்பனையின் மீது அரசு தடைவிதிக்கக் கூடாது. அவ்வாறு தடைவிதிப்பது சுதந்திர வர்த்தகத்திற்கு எதிரான நடவடிக்கையாகவே கொள்ளப்படும்.

4. குடிநீரின் தரம் குறித்து எந்த அரசும் தன்னிச்சையாகச் சட்டம் இயற்றவோஇ அதன் அடிப்படையில் பன்னாட்டு நிறுவனங்களுக்கு தடை விதிக்கவோ கூடாது.

5. தேசிய சட்டங்கள் உள்நாட்டு கம்பனிகளை மட்டுமே கட்டுப்படுத்தும் உலக வர்த்தக கழகத்தின் விதிமுறைகள் மட்டுமே பன்னாட்டு நிறுவனங்களைக் கட்டுப்படுத்தும் உள்நாட்டு உச்ச நீதி மன்றத் தீர்ப்புகள் பன்னாட்டு நிறுவனங்களைக் கட்டுப்படுத்தாது.

இவ்வாறு தண்ணீர் தொடர்பாக காட்ஸ் ஒப்பந்தத்தின் விதிமுறைகள் காணப்படுகின்றது. இவற்றோடு மேலும் பல விதிமுறைகளை இவ்வொப்பந்தம் கொண்டுள்ளது. நம்பமுடியாததாகவும், நடக்க முடியாததாகவும் தோன்றலாம். ஆனால் உண்மை.

தற்போது அமெரிக்கா, கனடா, மெக்சிகோ நாடுகளில் “நோப்தா” என்கிற ஒரு சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் நடைமுறையில் உண்டு. இவ்வொப்பந்தமும் தண்ணீரை ஒரு விற்பனைச் சரக்காக கருதுகிறது. இந்நிலையில் உலக குடிநீர் வளத்தில் இருபது விழுக்காடு நீரைக் கொண்டுள்ள கனடாவிலிருந்து பன்னாட்டு நிறுவனங்கள் பெரிய மைதானங்கள் அளவிலான உறைகளில் நீரை நிரப்பி அதனை கப்பலில் கட்டி இழுத்துச்சென்று ஏற்றுமதி செய்கின்றன. இதனைவிட நீர்வளம் குறைந்த மெக்சிகோவில் அந்நாட்டு மக்கள் தமது சொந்தக் கிணற்றிலிருந்து குறிப்பிட்ட அளவுக்கு மேல் தண்ணீர் எடுக்க அரசிடம் அனுமதி பெறவேண்டும் அறிவிக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் உண்டு நீரின் முக்கியத்தைவும். அதன் அருகிவரும் நிலைமையினையும் உணர்ந்தே அரசு இந்த நடவடிக்கையினை மேற்கொண்டுள்ளது

எனவே இந்த உலகம் தாகத்தில் தவிக்கும் உலமாக மாறிக்கொண்டிருக்கிறது. அதனை நாம் எங்கள் கண்முன்னே எங்களது சூழலிலும் காண்கின்றோம், தண்ணீர் நெருக்கடி உலக நெருக்கடியாக மாறிவருகிறது. தண்ணீருக்கான யுத்தம் செய்யும் அளவுக்கு நாடுகள் சென்றாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. உலகில் தண்ணீர் நெருக்கடி ஏற்படுகின்ற போது சக்திமிக்க நாடுகள் நீர் வளம் உள்ள நாடுகளை ஆக்கிரமிக்க முற்படும். ஆதாவது தண்ணீர் தட்டுப்பாடு காரணமாக நாடுகள் நீர்வளம் உள்ள பிரதேசங்களை தங்களின் ஆதிக்கத்தின் கீழ் கொண்டுவர முயலும். இதனால் சில பிரதேசங்களை பல நாடுகள் கையகப்படுத்த முயலும் இதன்போது ஏற்படுகின்ற முறுகல்கள் முரண்பாடுகள் போர்களில் முடிவடையும் வாய்ப்பே அதிகம் காணப்படுகிறது.

அதற்கான பனிப்போர் இப்போது தொடங்கிவிட்டதாகவே கருத வேண்டியுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கிரிக்கெட்டும் யாழ்ப்பாணமும்

ஸ்ரீ.இந்துஷன்

யாழ்ப்பாணத்திலும் சரி ஒட்டு மொத்த இலங்கையிலும் சரி கிரிக்கெட் தவிர்க்க முடியாத ஒரு விளையாட்டாக மாறிவிட்டது. குறிப்பாக வடமாகாணத்தில் இருந்து இலங்கை தேசிய அணிக்கு தெரிவு செய்யப்பட்ட முதலாவது வீரராக விஜயகாந்த் வியாஸ்காந்த் தெரிவு செய்யப்பட்ட பிறகு, யாழ் இளசுகளுக்கு கிரிக்கெட் மீதான ஆர்வமும் பற்றும் இன்னுமொருபடி அதிகரித்துள்ளதா? என்றால் சந்தேகம் தான்.

அதிகமான கால அளவு தேவையில்லை. 05 அல்லது 06 வருடங்களுக்கு முன்னர் இளைஞர்கள் மாலை வேளையில் மைதானத்தில் செலவிடும் நேரத்தையும் தற்போதைய இளைஞர்கள் செலவிடும் நேரத்தையும் ஒப்பிட்டுப் பார்த்தால் வித்தியாசம் புரியும். 16 - 22 வயதை அண்மித்த வீரர்கள் மிகக் குறைவாகவே தற்காலத்தில் மைதானத்தில் காணப்படுகின்றனர். இந்த வயது பகுதி ஒரு இரண்டும் கெட்டான் வயது. எந்த வழிக்கும் இலகுவாய் திரும்பும் இவர்களை பாதுகாக்க வேண்டிய கடமை பெற்றோருக்கு கட்டாயமாக உண்டு.

அடுத்த கட்டமாக இரு வகையான கிரிக்கெட் இங்கே உண்டு. வன்பந்து கிரிக்கெட் மற்றும் மென்பந்து கிரிக்கெட். ஒரு வீரர் தேசிய, சர்வதேச அளவில் மிளிர வன்பந்து கிரிக்கெட் மட்டுமே உதவமுடியும். அது தான் தொழில் முறை கிரிக்கெட். நீங்கள் சிந்திக்கலாம் நுவான் துசார, நடராஜன், வருண் சக்கரவர்த்தி எல்லாம் மென்பந்து விளையாடியவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தானே என்று. அவர்கள் மென்பந்து விளையாடி இருந்தாலும் வன்பந்து பயிற்சியின் பிற்பாடு தான் அணியில் சேர்ந்திருப்பார்கள். பந்து வீச்சாளர்கள் ஓரளவு சமாளித்துக் கொள்ளலாம். ஆனால் துடுப்பாட்ட வீரர்களுக்கு மென் பந்திலிருந்து வன் பந்திற்கு மாறுவது அவ்வளவு எளிதான காரியமில்லை. அதைத் தாண்டி களத்தடுப்பு தான் கிரிக்கெட்டின் முதுகெலும்பு. வன்பந் தில் களத்தடுப்பு செய்ய நீண்ட கால பயிற்சி தேவை.


நேரடியாக விடயத்திற்கு வருவோம். யாழ்ப்பாணத்தில் தற்போது வன்பந்து கிரிக்கெட் போட்டிகளை விட மென் பந்து கிரிக்கெட் மீது தான் மோகம் அதி கரித்து காணப்படுகிறது. சில சந்தர்ப்பங் களில் 9 அல்லது 10 வீரர்களோடு நடந்த வன்பந்து கிரிக்கெட் போட்டி களும் உண்டு. இதற்கு முக்கிய காரணம் அதிகரித்துக் காணப்படும் மென்பந்து பிறிமியர்லீக்போட்டிகள். கிரிக்கெட்டை பிரபல்யப்படுத்துவது, வீரர்களை உள்வாங்குவது, பணப்பரிசில்கள் அதிகமாக வழங்குவது எல்லாம் நல்ல விடயம் தான். ஆனால் அதிகமாக வன் பந்து கிரிக்கெட் பிறிமியர் லீக் போட்டிகள் வைத்து இவற்றை நடை முறைப்படுத்தினால், வீரர்களின் போக்கு தொழில் முறைக் கிரக்கெட்டின் மீது அதிகம் திரும்பும். பணம் படைத்த நல் உள்ளங்கொண்ட அணி உரிமையாளர் கள் இந்த விடயத்தை கருத்தில் கொண் டால், இன்னும் நிறை விஜாஸ்காந்த் இம் மண்ணில் இருந்து சர்வதேச தரத்தில் சாதிக்க நிறைய வாய்ப்புள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிராமத்து நினைவுகள்





I

யாழ்ப்பாணம் அழகான வாழ்வியலைக் கொண்ட ஒரு பிரதேசம். பல்வேறு வகையான நிலப் பிரிவுகளைக் கொண்ட இந்த மண்ணில் மண்சார்ந்த பல்வேறு வாழ்வியல் உண்டு. கிராமங்களின் வாசனைதான் யாழ்ப்பாணத்து வாசனை என்று பெருமைப்படும் அளவுக்கு யாழ்ப்பாணம் பழமையான வாழ்வியல் கட்டமைப்புக் களைக் கொண்ட ஒரு பிரதேசம் ஆகும். வரலாற்றுக் காலம் தொட்டு இந்த மண்ணின் மண்வாசனை அந்த வாசனை யோடு ஒட்டிய இறுக்கமான வாழ்வியல் முறை பல ஆளுமைகளை வெளிக் கொணர்ந்திருக்கின்றது.

தாய்வழிச் சமூக அமைப்பினையே பெரும்பகுதியாகக் கொண்ட ஒரு திருமணபந்த வாழ்வியல் முறை இன்றும் இந்த மண்ணில்தான் நிலவிவருகின்றது. திருமணத்திற்குப் பின்னர் ஆண் பெண்வீட்டில் சென்று வாழும் வாழ்வியல் முறை இந்த மண்ணில் காணப்படுகின்றது. இதனால்தான் இங்கு உருவாகின்ற எழுத்தாளர்கள் தங்கள் மண்சார்ந்த நினைவுகளை ஈரலிப்போடும் உணர்வு நிலையோடும் படைத்திருக்கின்றார்கள். ஒவ்வொரு ஆணின் மனதிலும் உள்ள மண்சார்ந்த நினைவுகள் அவர்களது திருமணத்திற்கு முந்தைய கடந்தகால நினைவுகளை மீட்டுகின்றன.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு கிராமிய வாழ்வில் ஒருவன் சிறு வயது முதல் திருமண பந்தம் வரை வாழ்ந்த வாழ்க்கையின் ஒவ்வொரு பொழுதுகளும் நினைவுகளாக மீட்கப் படுகின்றன. இங்கு இன்ப நினைவுகளோடு துன்ப நினைவுகள் கூட ஒருவகையான சுகத்தையும் வலியினையும் இறக்கி வைப்பவையாகவே காணப்படுகின்றன. ஒரு கிராமியம் சார்ந்த எளிமையான வாழ்வியல் முறையினை எமது மண்ணின் எழுத்தாளர் இலங்கையர்கோன் அவர்கள் தனது புகழ்பெற்ற வெள்ளிப்பாதசரம் என்ற சிறுகதையில் மிக அழகாகவே வர்ணித்திருக்கின்றார்.

கிராமத்து நினைவுகளை மீட்டல் என்பது ஒருகாலத்து பண்பாட்டினை அறிந்துகொள்ளும் வகையாகவே உள்ளது. ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் இருக்கின்ற கிராமத்து நினைவுகள் என்பது இன்றும் பசுமையான நினைவுகளாகவே ஒவ்வொருத்தருக்குள்ளும் உறங்கியவண்ணம் உள்ளன. தான் வாழ்ந்த மண் அந்த மண்ணில் சுதந்திரமாக சுற்றித்திரிந்த இடங்கள், அங்கு வாழ்ந்த மனிதர்கள், உறவுகள், நண்பர்கள் அவர்கள் பற்றிய கதையாடல்கள் என நினைவுகள் நீண்டு கொண்டே செல்கின்றன. கடந்த காலத்தை நினைந்து கொள்ளல் என்பது ஒருவனது நடந்து வந்த பாதையினை அறிந்து கொள்ளலாகவே உள்ளது. ஈழத்தில் எழுந்த பல்வேறு வகையான இலக்கிய வகைமைகள் எல்லாம் ஒரு காலத்து வாழ்வியல் பற்றிய வர்ணனைகளை மிக அழகுறவே வெளிக்காட்டி உள்ளன. அந்த வாழ்வியல் தந்த சுகமும் வலிகளும் இன்று அதற்காய் ஏங்கும் நிலையும் ஒவ்வொரு மனிதனது ஆழ் மனத்திலும் இன்றுவரை ஒரு ஏக்கமாகவே உள்ளன.

புவிசார்ந்த நிலவியலுக்கேற்ற காலநிலை அந்த மண்ணின் இயல்பு வாழ்கையோடு ஒன்றிப் போயுள்ளன. யாழ்ப்பாணத்து காலநிலை என்பது வெயில், மழை, குளிர் என்ற மூன்று காலநிலைகளோடு மட்டும் தொடர்புபடாமல் இந்த மண்ணில் வீசப்படுகின்ற காற்றோடும் இதன் பண்பாடு கலந்துள்ளது. யாழ்ப்பாணத்துப் பண்பாட்டில் 'காற்றுப் பண்பாடு' என்பது ஒரு ரசனையானது. யாழ்ப்பாணத்தில் வீசுகின்ற காற்றினை சோளகம், கொண்டல், கச்சான், என மக்கள் பெயர்சொல்லி அழைக்கும் பண்பாடு இன்றும் காணப்படுகின்றது. யாழ்ப்பாணத்தில் காற்றுப் பண்பாடு என்பது பருவநிலை மாற்றங்களைக் குறிக்கின்ற பண்பாடாகும். இந்த மாற்றங்கள் மண்சார்ந்த வாழ்வியலை அதன் இயற்கைநிலை உணவு உற்பத்திகளோடு தொடர்பு பட வைக்கின்றன. இயல்பிலேயே யாழ்ப்பாணம் என்பது வெப்ப நிலைகொண்ட ஒரு பிரதேசம் ஆகும். இந்த வெப்பத்தினைத் தணிப்பதற்காக வீசுகின்ற காற்றின் ஈரம் மண்ணினை மலரச்செய்கின்றது. காற்றுப் பண்பாட்டினை நுகரும் யாழ்ப்பாணம் தனது பண்பாட்டியல் கூறுகளில் காற்றுப் பண்பாட்டினை ஒரு நிலம்சார்ந்த அடையாளமாகவே வைத்திருக்கின்றது.



பருவகாலக்காற்றுக்கள் யாழ்ப்பாணத்தின் கிராமங்களில் பல்வேறு தொழில் சார்ந்த முயற்சிகளையும் ஊக்குவிக்கின்றது. யாழ்ப்பாணத்தின் உணவுப் பண்பாட்டு முறைகளில் பலகாரப் பண்பாடு என்பது இன்றும் கிராமங்களிலேயே அதிகம் காணப்படுகின்றது. ஒவ்வொருவரது வாழ்விலும்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலம் சார்ந்த நினைவுகளில் கிராமம் சார்ந்த நினைவுகளில் இனிமையாக வந்து போவது கிராமத்து நிகழ்வுகளில் உண்டு களித்த பலகாரங்களாகும். அதனை விட பனங்காய்பணியாரம் என்பது ஒரு கிராமத்து பண்பாட்டில் முக்கியம் பெறுகின்றது. இந்த பனங்காய் பணியாரப் பண்பாடு யாழ்ப்பாணப் பண்பாட்டின் ஒரு அடையாளமானவே பார்க்கப்படுகின்றது. காற்றுக் காலங் களில் பனம்பழம் பொறுக்கச் சென்ற நினைவுகள் பனங்கூடலுக்குள் இருந்து பனம்பழம் உண்ட நினைவுகள், பனம் கூடலுக்குள் ஒருபனைக் கள்ளு அருந்திய நினைவுகள் என பல நினைவுகள் ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் தான் வாழ்ந்த கிராமம் பற்றிய நினைவில் வந்து போகின்றன.

மனித நடத்தைப் பாங்கு செம்மை யடைவது கிராமிய பண்பாட்டில்தான். அறம்சார்ந்த ஒழுங்க முறைகளை அதிகம் கடைப்பிடிப்பது கிராமிய வாழ்க் கையில்தான். இத்தகைய உயரிய ஒழுக்க நெறிகளும் நன்னடத்தைகளும் உள்ள ஒரு கிராமிய பண்பாடு மனிதனுக்கு மனிதத்தை கற்றுக் கொடுத்தது. உறவு களைப் பேணவும் சொந்தங்களை அணைக்கவும் ஒரு கூட்டு வாழ்வியல் முறையினை கிராமிய வாழ்வியல் முறையே மனிதனுக்கு கற்றுத்தருகின் றது. நிலம்சார்ந்த வாழ்வியல் முறை யில் ஏற்படும் மாற்றங்கள் மனித பண்பியல் நடத்தைகளில் எந்தவித மாற்றத்தினையும் ஏற்படுத்துவதில்லை காரணம். கிராமிய மண்வாசமும் கிராமிய மொழிக் கூறுகளும் தனிமனித நடத்தைகளில் செலுத்தும் தாக்கம் அவனை திசைவழிச் செல்லாத நடத்தைக் கோலங்கள் மாறாத ஒரு மனிதனாகவே வாழவைக்கிறது.

ஒரு கிராமத்தின் ஒவ்வொரு துண்டு நிலத்திலும் அந்த கிராமத்தின் ஒவ்வொரு பொழுதிலும், வாழ்க்கையிலும் பண்பாட்டுக்கூறுகளே விரவி நிற்கின்றன.



கிராமம் சார்ந்த வாழ்வியலை வாழ்ந்த ஒரு மனிதனால் கட்டமைப்பான ஒரு வாழ்க்கை முறையினை கட்டமைத்துக் கொள்ளலாம். ஒரு ஆணின் வாழ்வியல் முறை என்பது திருமணத்திற்கு முன் திருமணத்திற்கு பின் என இரண்டு தளங்களில் திருமண பந்தத்தில் இணைந்து பிறந்த கிராமத்திலேயே வாழும் ஆணின் மன ஓட்டங்களும் திருமண பந்ததின் பின்னர் வேறு ஊரில் வாழும் ஆணின் மன ஓட்டங் களும் அல்லது புலம்பெயர்ந்த தேசத் தில் வாழும் ஒரு ஆணின் மன ஓட் டங்களும் கிராமியம் பற்றிய நினைவு களில் ஒவ்வொரு தளத்தில் நின்று அசைபோடுகின்றன. இவற்றில் தான் பிறந்து வளர்ந்த கிராமத்தை விட்டு வெளியில் வசிக்கும் இரண்டுவிதமான ஆண்களின் மனதில் ஓடும் கிராமம் பற்றிய பாசமும் அக்கறையும் அதன் மீதான ஈர்ப்பும் ஒரு ஏக்க உணர்வினையே ஏற்படுத்துகின்றன.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சும்மா முசுப்பாத்தி


தேர்தல் வந்தா கொண்டாட்டம்
திருவிழா பாடு திண்டாட்டம்
அண்ணமார் போடுவினம் கரகாட்டம்
ஆளுக்கொரு கிறவுண்டுல துடுப்பாட்டம்
எங்கட பாடோ இனி திண்டாட்டம் - அட
மாடுகளுக்கு இனி கொண்டாட்டம்

---

# கோளாறு மாமா

**தமிழழகன்**
வவுனியா

கனகாலத்துக்கு பிறகு என்னடா மோட்டர் சைக்கிள் அலுங்காம குலுங்காம ஓடுதெண்டு பார்த்தா புதுசா கார்பெட் ரோட்டு போட்டிருக்கிறாங்கள், மகிழ்ச்சி பிடிபடயில்லை, பிறகுதான் ஞாபகம் வந்துது கிட்டடியில தேர்தல் வேறு விசயம் சரி எவன் குத்தினா என்ன அரிசி வந்தா சரி எண்டு பயணத்தை சற்று வேகமாக தொடர்ந்தன் ரோட்டும் பிழையில்லாமல் வளைந்து நெளிந்து போகுது சடார் எண்டு ஒரு கிடங்குடன் கூடிய மண் ரோட்டுத்துண்டு என்ன கோதாரி எண்டு பாத்தா நகரசபை எல்லை முடிஞ்சு பிரதேச சபை தொடங்குதாம்! இஞ்சால காப்பட் ரோடு அங்கால தார்ரோடு நடுவுக்க 5 அடிக்கு மண்ரோடு யார் போடுறதெண்ட எல்லைப் பிரச்சனையில பல ரோட்டுகளில திருஷ்டி கழிக்கிற மாதிரி எல்லை பிரிக்கிற மண் ரோட்டு துண்டுகள் நாடு பூராவும்



காணலாம் என்னத்த சொல்ல நாடுகளுக்கிடையில எல்லைப் பிரச்சனை தீரலாம், ஏன் எங்கட நாட்டுப் பிரச்சனை கூட தீரலாம் ஆனால் உள்ளூராட்சி சபை ரோட்டுகளின்ற எல்லைப் பிரச்சனை மட்டும் தீராதப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுவை விருந்து

"சுவை விருந்து எனும் இந்த பதிவு உணவு சுவைஞர்களுக்காகவும் யாழ்ப்பாணத்திற்கு வருகின்ற சுற்றுலாப்பயணிகளுக்காகவும் யாழ்ப்பாணத்தின் உணவு அடையாளங்களை காட்டும் முகமாக ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு விருந்தகங்களாக பதியப்பட உள்ளது."

## Cosy Restaurant & Hotel

**அஜினமோல்ட் இல்லாத உணவு தயாரிப்பு**

யாழ்ப்பாணம் மீள் குடியேற்றத்தின் பின்னர் புதிய நிர்வாகச் செயற்பாடுகளுக்குள் தன்னை உள்வாங்கிக் கொண்டது. புதிய அடையாளங்கள் யாழ்ப்பாணத்தில் முளைவிடத் தொடங்கின. அத்தகைய ஒரு அடையாளமாக 2002ஆம் ஆண்டில் யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்டது தான் Cosy Restaurant & Hotel ஆகும். யாழ்ப்பாணத்தில் இருந்த பிரபல வர்த்தகரான சுப்பிரமணியத்தின் இளைய மகன் சுதர்சனால் ஆரம்பிக்கப்பட்டது. யாழ்ப்பாண நகரத்தில் உள்ள சிறாம்பிடியடி லேனில் அவர்களது சொந்தக் கட்டடத்தில் இது ஆரம்பிக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்திற்கு வந்த புதிய வரவுகளில் ஒன்றாக இது காணப்பட்டது. யாழ்ப்பாணத்தில் திறக்கப்பட்ட உயர்தர விருந்தகமாக இது விளங்கியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த விருந்தகத்தின் அமைப்பு அதன் செயற்பாடு உணவு பரிமாறும் முறை என்பன அதுவரை யாழ்ப்பாணத்தில் இருந்திராத உயர்தரமான ஒழுங்கு முறை ஊடாக நடைமுறைப் படுத்தப் பட்டது. இந்த விருந்தகத்தில் வழங்கப் படும் உணவுகள் அனைத்தும் உயர்தர மானதாகவும் சுவையானதாகவும் இருந் தமையினால் யாழ்ப்பாணத்தின் பலபகுதி களில் இருந்தும் பல்வேறு தரத்தினர் இதற்கு வருகை தர ஆரம்பித்தனர். யாழ்ப்பாணத்தில் உள்ளவர்களும் யாழ்ப் பாணத்திற்கு வருகை தருபவர்களும் கொசி விருந்தகத்தில் உணவு உண்பதை பெருமையாக நினைக்கும் கௌரவமும் இருந்திருக்கின்றது. சிறுவர்கள், இளை ஞர்யுவதிகள் பெரியவர்கள் என அனைத்து தரத்தினரையும் திருப்திப்படுத்தக்கூடிய புதிய புதிய உணவு வகைகளை இவர்கள் அறிமுகம் செய்தார்கள்.

இந்த விருந்தகத்தின் உணவுகளில் சிறப்பானதாக 'கொசி சூப்' , 'நாண்' என் பவை இன்றளவும் பேசப்படும் உணவு களாக உள்ளது. சூப், நாண் என்றால் அது கொசிதான் என்று இன்றுவரையும் அதன் பெயரை தக்கவைத்துக் கொண் டிருக்கிறார்கள். இன்று ஸ்ரான்லி வீதியில் உள்ள அவர்களது சொந்த கட்டடத்தில் மிகப்பிரமாண்டமான முறையில் புதிய வடிவமைப்புக்களுடன் அதன் செயற்பாடுகள் தொடர்ந்து கொண்டிருக்கிறது. இதன் சிறப்புக் களில் மிக முக்கியமானது உலகின் பல் வேறு நாடுகளில் தடைசெய்யப்பட்ட அஜினமோல்ட் டினை பயன்படுத்துவ தில்லை. இந்திய உணவுகளுக்கென தனித்துவமான விருந்தகமாக விளங்கும் கொசி தனது உணவு தயாரிப்புக்கான பொருட்களை இன்றுவரை இந்தியா வில் இருந்து நேரடியாக இறக்குமதி செய்கின்றது. இங்கு உணவு தயாரிப் பில் ஈடுபடும் பிரதான Cook இந்தியா



வில் இருந்து வந்தவர். இன்றும் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த வெளிநாட்டவர் களும் புலம் பெயர்ந்த உறவுகளும் விரும்பி வந்து உணவு அருந்திச் செல் கிறார்கள். இவர்களது விருந்தகத்தின் சூழலை வீட்டில் உள்ள சூழல் போன்று இருக்க வேண்டும் என குடும்பத்துடன் வீட்டில் இருந்து உணவு உண்ணும் அனுபவம் இங்கும் வாடிக்கையாளருக்கு கிடைக்க வேண்டும் என்பதில் இவர்கள் அதிக சிரத்தை எடுத்து வருகின்றார்கள். இன்று யாழ்ப்பாணத் தில் அதிகளவான பல்வேறு தரத்திலான பல வகையான விருந்தகங்கள் வந்தாலும் யாழ்ப்பாணத் தில் முதன்முதலாக வந்த உயர்தரமான இந்தி உணவு விருந்தகமாக கொசியே காணப்படுகின்றது. ஒரு பண்பாட்டின் பேணுகையாக வரவேற்பில் யாழ்ப் பாணத்தின் சித்தர் பரம்பரையி னைச் சேர்ந்த குடையிற் சுவாமிகளின் உருவச் சிலையினை வைத்திருக்கிறார்கள். சைவ,அசைவ உணவுகள் பல வகைகள் காணப்படுவதை உணவுகள் பற்றிய இவர்களது பட்டியலில் காணமுடிகிறது. ஒரு நல்ல உணவகத்திற்கு சென்று அமைதியாக இருந்து சுவைமிக்க உணவு அருந்த வேண்டுமானால் யாழ்ப்பாணத் தில் உள்ள உயர்தரமான விருந்தகங்களில் கொசி விருந்தகத்திற்கு தனித்த இட முண்டு. காலம் கடந்தும் தனது பெயர் மங்காது தொடர்ந்து உயர்தரமாக செயற் பட்டு வருகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படித்ததில் பிடித்தது



# தமிழில், 14 வகையான மழை உண்டு!

01. மழை
02. மாரி
03. தூறல்
04. சாரல்
05. ஆலி
06. சோனை
07. பெயல்
08. புயல்
09. அடை (மழை)
10. கன (மழை)
11. ஆலங்கட்டி
12. ஆழிமழை
13. துளிமழை
14. வருள்மழை

வெறுமனே, மழைக்குப் பல பெயர்கள் அல்ல இவை! ஒவ்வொன்றுக்கும் வேறு பாடு உண்டு!

இயற்கை நுனித்த தமிழ்!
ஏன் அடைமழை என்கிறோம்?
அடைமழை = வினைத்தொகை!

- அடைத்த மழை
- அடைக்கின்ற மழை
- அடைக்கும் மழை

விடாமல் பெய்வதால், ஊரையே "அடை"த்து விடும் மழை = அடை மழை! அடைத்துக் கொண்டு பெய்வதாலும் அடைமழை!

கனமழை வேறு! அடைமழை வேறு!

மழ = தமிழில் உரிச்சொல்!

- மழ களிறு = இளமையான களிறு
- மழவர் = இளைஞர்கள்

அந்த உரிச்சொல் புறத்துப் பிறப்பதே.
மழை எனும் சொல்! மழ + ஐ

இளமையின் அலட்டல் போல், காற்றில் அலைந்து அலைந்து பெய்வதால், புதுநீர் உகுப்பதால் மழை எ. காரணப் பெயர்!

மழை வேறு / மாரி வேறு!
அறிக தமிழ் நுட்பம்! இயற்கை!
மழை/மாரி ஒன்றா?

- மழை = இள மென்மையாக அலைந்து பெய்வது, காற்றாடி போல!

- மாரி = சீராகப் பெய்வது, தாய்ப் பால் போல!

தமிழ்மொழி,
பிறமொழி போல் அல்ல!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்வியல் மிக்கது!

1. ஆலி - ஆங்காங்கே விழும் ஒற்றை மழைத்துளி - உடலோ உடையோ நனையாது

2. தூறல் - காற்று இல்லாமல் தூவலாக பெய்யும் மழை - புல் பூண்டின் இலைகளும், நம் உடைகளும் சற்றே ஈரமாகும் ஆனால் விரைவில் காய்ந்து விடும்..

3. சாரல் - பலமாக வீசும் காற்றால் சாய்வாக அடித்துவரப்படும் மழை சாரல் எனப்படும். மழை பெய்யுமிடம் ஓரிடமாகவும், காற்று அந்த மழைத் துளிகளை கொண்டு சென்று வேறிடத்திலும் வீசி பரவலாக்குவதை சாரல் என்பர்.

- சாரல் என்பது மலையில் பட்டு தெறித்து விழும் மழை என சிலர் கூறுவது முற்றிலும் தவறு.. (சாரலடிக்குது சன்னல சாத்து என்பதை கவனிக்கவும்)

  சாரல் - சாரம் என்பன சாய்வை குறிக்கும் சொற்கள், மலைச்சாரல் என்பது மலையின் சரிவான பக்கத்தை குறிக்கும்.

  அதை தவறாக மலையில் பட்டு தெறிக்கும் நீர் என பொருள் கொண்டு விட்டனர் என்று கருதுகிறேன்.

  சாரல் மழை என்பது சாய்வாய் (காற்றின் போக்குக்கும் வேகத்துக்கும் ஏற்ப) பெய்யும் மழை என்பதே பொருள்

  சாரல் மழையில் மழை நீர் சிறு ஓடையாக ஓடும்... மண்ணில் நீர் தேங்கி ஊறி இறங்கும்

4. அடைமழை - ஆங்கிலத்தில் Thick என்பார்களே அப்படி இடைவெளியின்றி பார்வையை மறைக்கும்படி பெய்யும் மழை. அடை மழையில் நீர் பெரும் ஓடைகளாகவும் குளம் ஏரிகளை நிரப்பும் வகையிலும் மண்ணுக்கு கிடைக்கும்..

5. கனமழை - துளிகள் பெரிதாக எடை அதிகம் கொண்டதாக இருக்கும்

6. ஆலங்கட்டி மழை - திடீரென வெப்பச்சலனத்தால் காற்று குளிர்ந்து மேகத்தில் உள்ள நீர் பனிக்கட்டிகளாக உறைந்து, மழையுடனோ அல்லது தனியாகவோ விழுவதே ஆலங்கட்டி மழை (இவ்வாறு பனி மழை பெய்ய சூடோமோனஸ் சிரஞ்சி என்ற பனித்துகள்களை உண்டாக்கும் பாக்டீரியாவும் ஒரு காரணமாகும். புவி வெப்பமயமாதலினால் இந்த பாக்டீரியா முற்றிலும் அழிந்து விடக்கூடும் என அறிவியலாளர்கள் அஞ்சுகின்றனர்).

7. பனிமழை - பனிதுளிகளே மழை போல பொழிவது. இது பொதுவாக இமயமலை ஆல்ப்ஸ் போன்ற மலைப்பகுதிகளில் பொழியும்..

8. ஆழி மழை - ஆழி என்றால் கடல் இது கடலில் பொழியும் மழையை குறிக்கும். இதனால் மண்ணுக்கு பயனில்லை ஆனால் இயற்கை சமன்பாட்டின் ஒரு பகுதி இம் மழை.

மாரி - காற்றின் பாதிப்பு இல்லாமல் வெள்ளசேதங்கள் இன்றி மக்கள் இன்னலடையாமல் பெய்யும் நிலப்பரப்பு அனைத்தும் ஒரே அளவு நீரைப் பெறுமாறு சீராக பெய்வது.

(அதனால்தான் இலக்கியங்களில் 'மாதம் மும்மழை பெய்கிறதா?' என்று கேட்காமல் மக்கள் அவதிக்குள்ளாகாமல் 'மாதம் மும்மாரி பெய்கிறதா?' என்று கேட்பதாக சொல்லப்பட்டிருக்கின்றன.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழிந்து வரும் நகர காடுகள்

செந்தாளன்



உலக தோற்றம் இயற்கையின் மடியில் இருந்து ஆரம்பிக்கின்றது. இயற்கையின் ஒவ்வொரு பரிமாண தோற்றத்தின் விளைவே உலகமாகும். அந்த உலகின் இயங்கியலுக்கு அதன் சக்தி காரணமாகின்றது. உலகில் உள்ள உயிரினங்களின் தோற்றத்திற்கும் இயற்கையே மூலாதாரமாக இருந்து வருகின்றது. உலகில் உயிரினங்கள் தோன்றி பல ஆயிரம் ஆண்டுகளைக் கடந்த நிலையில் இன்னமும் கண்டுபிடிக்கப்படாத உயிரின வகைகள் உலகில் வாழ்ந்து கொண்டுதான் இருக்கின்றது. இந்த உல இயக்கத்திற்கும் அதன் இயங்கியலுக்கும் இயற்கையே மூலாதாரமாக இருக்கிறது.

உலகில் வாழும் உயிரினங்களில் அறிவுநிலையில் உயரிய உயிரினமான மனிதன் உள்ளான். இந்த மனிதனின் அறிவாற்றலின் எழுச்சி அவனை ஒரு நாகரீக சமூகமாக உருவெடுக்க வைத்திருக்கின்றது. எனினும் அவன் எவ்வளவு உயர்ந்து போனாலும் மனிதனுக்கு வேண்டியவைகளை அவன் இயற்கையில் இருந்தே பெறவேண்டி இருக்கின்றது. மனிதனது உயிர் வாழ்வுக்கு தேவையான ஒட்சிசனை அவன் இயற்கையில் இருந்தே பெறுகின்றான். இன்றைய உலகம் நாகரீகங்களால் வளர்ந்துள்ள நிலையில் அந்த நாகரீகங்கள் அறிவியல் என்பன இயற்கையின் வளர்ச்சிக்கு தடையாக உள்ளன என சூழிலியலாளர்கள் கூறிவருகின்றார்கள். மனிதன் இயற்கையை அழித்து நாகரீகங்களை கட்டுகின்றான் என்ற குற்றச்சாட்டு எழுந்துள்ளது. அவன் உயிர்வாழ்வதற்கு வேண்டிய ஒட்சிசனை வழங்குவது இயற்கை. மரங்கள் வழங்கும் ஒட்சிசன் தான் அவன் உயிர்வாழ்வுக்கு ஆதாரமாக அமைகின்றது.

இன்று மரங்கள் இல்லாத சூழலில் வெளிகளை நிரப்பியிருக்கும் வாயுக்களில்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒட்சிசனின் அளவு செறிதாக இருக்கும் அது இல்லாமல் போனால் மனிதனால் சுவாசிக்கமுடியாது போய்விடும். இந்த சுவாச சமநிலையினை பேணும் முகமாக உருவாக்கப்பட்ட ஒரு கட்டமைப்புதான் நகர காடுகள். நகரக்காடுகள் என்பது ஒவ்வொரு நகரங்களுக்கு அண்மையில் ஒரு சிறிய காடுகள் காணப்படுவதையே நகர காடுகள் என் அழைக்கின்றோம். அந்த நகரத்திற்கு வேண்டிய ஒட்சிசனை வழங்குவதால்தான் இதனை நகர காட்டுகள் என்ற சொற்பதத்தால் அழைக் கப்படுகின்றது. நகரங்களில் மனிதர்களின் செறிவு அதிகமாக இருக்கும். மனிதர் களால் வெளியிடப்படுகின்ற காபனீ ரொட்சைட் அளவு அதிகரிக்கும் போது அங்கு வளிமண்டலம்தனது சமநிலையில் இருந்து மாறுபடுகின்றது. இது மனித சுவாசத்திற்கு பெரும் அச்சுறுத்தலாக அமையும். எனவேதான் மனிதர்கள் அதிகம் செறிந்து வாழும் இடங்களில் மரங்களை நடச்சொன்னார்கள் எமது முன்னோர்கள். நகரங்களில் மனிதர்கள் செறிந்து வாழ்வதால் அவர்களுக்கு வேண்டிய ஒட்சிகனை வழங்குவதற்காக உருவாக்கப்பட்ட அல்லது தானாகவே உருவானதுதான் நகர காடுகள் ஆகும். இந்த காடுகளில் உள்ள மரங்களில் இருந்து வெளிவருகின்ற வாயுக்கள் வளிமண்டலத்தினை சுத்தம் செய்வ தோடு மனிதனுக்கு வேண்டிய சுத்தமான ஒட்சிசனை வழங்குகின்றன. வளர்ந்த நாடுகளில் வளிமண்டலத்தில் ஒட்சிசனின் அடர்த்தி குறையும் போது செயற்கையான இயந்திரம் மூலம் வளிமண்டலத்தில் உள்ள ஏனைய வாயுக்களை ஒட்சிசனாக மாற்றும் இயந்திர பொறிமுறையை பயன்படுத்துகிறார்கள்.

எனவே நகரக்காடுகள் என்பது மனிதனது சுவாசத்திற்கு வேண்டிய தூய்மையான ஒட்சிசனை வழங்கும் தொழிற்சாலைகள் ஆகும். இதனால் தான் முன்னைய காலங்களில் மக்கள் அதிகமாக கூடுகின்ற இடங்களில் அரச மரங்களை வைத்தார்கள். அரச மரத்தடியில் விநாயகரை வைத்து மக்கள் ஒன்று கூடிய வழிபட்டிருக்கிறார்கள். மரங்களில் அரசமரம்தான் அதிகளவான ஒட்சிசனை வெளியிடுகின்றது. அரச மரத்தடியில் மக்கள் கூடுகின்ற போது அவர்களுக்கு நிறைவான ஒட்சிசன் கிடைக்கின்றது. இன்று மரங்கள் அழிக்கப்பட்டு வெப்பத்தின் தாக்கமும் அதிகரித்து வருகின்றது. இன்றைய யாழ்ப்பாணம் அதிகளவான மக்கள் வரவினைக் கொண்ட நகரமாக இருக்கின் றது. யாழ்ப்பாணத்தின் நகரகாடுதான் பழைய பூங்கா (Old Park) ஆனால் அந்த கட்டமைப்பும் சிதைவுக்கு உள்ளாகி வருகின்றது. பழைய பூங்காவுக்குள் இருக்கும் மரங்கள் அழிக்கப்பட்டு அங்கு கட்டங்கள் உருவெடுத்துவருகின்றது. இது வேதனைக்குரியது. பழைய பூங்கா வில் உள்ள நகர காடுக்கான மரங்களின் செறிவுதான் பல்வகைமை உயிரினத்திற் கும் அடைக்கலமாக இருக்கின்றது. நகர காடுகள் வெறுமனே ஒட்சிசனை மட்டும் வழங்குவதோடு நின்றுவிடாது பல்வகைமை உயிரினங்களின் வாழ்விட மாகவும் இருக்கின்றது. பழைய பூங்காவில் இருக்கின்ற பல்வேறு உயிரி னங்களின் வாழ்வுக்கு அச்சுறுத்தலாக மனித நடமாட்டம் அதிகமாக உள்ளது. இது தடுக்கப்பட வேண்டும். இத்தகைய உயிரினங்களின் சங்கிலித் தொடர் அழிக்கப்படுமாக இருந்தால் அது மனித இனத்தின் இருப்புக்கே கேள்விக்கிடமாக போய்விடும். எனவே யாழ்ப்பாண நகரத்தின் நகரக்காடு பாதுகாக்கப்பட வேண்டும். அதற்குரிய பணிகளை அரசும் பொது அமைப்புக்களும் மக்களும் இணைந்து மேற்கொள்ள வேண்டும். இனிவரும் தலைமுறைக்கு சுத்தமான காற்றினை வழங்குவதை உறுதி செய்ய வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வடமராட்சியில் இருந்த திண்ணை பள்ளிகூடங்கள்

அக்காலக் கல்விப் பாரம்பரியத்தின் முக்கிய நிறுவனமான திண்ணப் பள்ளிகளின் அமைப்பினையும் ஆசிரியர் மாணவர் உறவினையும் நோக்கும் பொழுது, பள்ளிக்கூடம் ஆசிரியரின் வீட்டிலோ, அல்லது அவ்வூர்ப் பெரியவரின் வீட்டிலோதான் அமைந்திருந்தது. ஆசிரியர் தனியாக அமைந்த திண்ணையில், பலகையில் அல்லது பாயில் அல்லது மான் தோலில் அமர்ந்திருப்பார்.

அவரைச் சூழவுள்ள திண்ணைகளில் பாய் போடப்பட்டிருக்கும் அல்லது நன்கு மெழுகிய திண்ணையாக இருக்கும்.

மாணவர்கள் வரிசையாக இருப்பார்கள். ஆசிரியர் பாடம் நடத்துவார், பெரும்பாலும் ஆரம்ப வகுப்புகளில் படிக்கும் மாணவர்களுக்கே காலையில் வகுப்புக்கள் நடக்கும். மாலையில் இலக்கணம், இலக்கியம், புராணபடனம், சோதிடம் என்பன வளர்த்தவர்களுக்குக் கற்பிக்கப்படும். எழுதிப்படித்தலை விட வாய்மொழியாகக் கேட்டு மனனம் செய்து படித்தலே பெரும்பான்மையாகும்.

வடமராட்சியின் எழுத்தறிவுப் பாரம்பரியம் யாழ்ப்பாணக் குடா நாட்டின் கல்விப் பாரம்பரியத்தினின்றும் வேறுபட்டுள்ளது என்று கூறமுடியாது.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் அக்காலத்தில் குருசீட முறையிலேயே கல்வி போதிக்கப்பட்டது. பரம்பரை பரம்பரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாக மரபுவழிக் கல்வி முறையே நிலவிவந்துள்ளது. மற்றைய தொழில்களைப் போலக் கல்வியும் தந்தையிடமிருந்து மகனுக்குப் போதிக்கப்பட்டது.

இந்த மரபு சிறிது காலம் செல்லத் திண்ணைப் பள்ளிக்கூடங்களாக உரு வெடுத்தன எனலாம்.

ஏறத்தாழ 20ஆம் நூற்றாண்டுவரை இத்திண்ணைப் பள்ளி மரபினை வடமராட்சிப் பகுதியிலே காணக்கூடியதாக இருந்தது. ஐரோப்பியர் வருகையை யொட்டி நிறுவனரீதியான ஆங்கில, தமிழ்ப் பாடசாலைகள் நிறுவப்பட்ட பின்னும் இப்பகுதியிலே மிக அண்மைக் காலம்வரை இத் திண்ணைப்பள்ளி மரபு காணப்பட்டது.

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரிக்கு மிக அருகில் (ஓடக்கரை) வெற்றிவேலு வாத்தியாரின் திண்ணைப்பள்ளி 1974 வரை இயங்கிவந்ததை அறிவோம். ஆங்கிலப் பாடசாலையில் படிக்கும் மாணவர்கள் இவரிடம் இலக்கணம், இலக்கியம், கணிதம் பயின்றுகொண்டிருந்தனர்.

பெரும்பாலான மாணவர்கள் இவரின் உறவினர்களாகவும் வசதியற்றவர்களாகவுமிருந்ததால் வேதனமின்றியும் இவர் கற்பித்தது உண்டு. வீட்டினுள்ளே நாலுபக்கமும் ஓரளவு உயரமான திண்ணையுண்டு. மாணவர் கீழே இருந்து திண்ணையில் வைத்து எழுதிப் படிப்பர். இவரின் முக்கியத்துவம் மனனம்" செய்விப்பதிலேயே தங்கியிருக்கும், "நெட்டுரு", "வாலாயம்" என்ற பதங்களை அடிக்கடி உபயோகிப்பர். உயர்தர இலக்கிய இலக்கணங்களை இவர் போதிப்பதில்லை. பாடத்திட்டத்தோடொட்டியே இவர் பயிற்சிகள் நடைபெறும். திண்ணைப் பள்ளியின் எச்ச சொச்சமா இவரின் பள்ளியைக் கருதலாம்.

1966 வரை புலோலியில் கந்தர் முருகேசனின் திண்ணைப்பள்ளி திறம்பட நடந்தமை குறிப்பிடத்தக்கது. இவரின் ஆழ்ந்தகன்ற தமிழ் புலமையும், முற்போக்குச்சிந்தனையும் "நொத்தாரிஸ்" பரீட்சைக்குத் தமிழிலக்கணம் பாடத்திட்டமாக அமைந்திருந்ததும் இவரது திண்ணைப்பள்ளியின் வளர்ச்சிக்கு முக்கிய காரணங்கள் எனலாம்.

நன்றி: பேராசிரியர்
எஸ். சிவலிங்கராஜா

## ஆக்கங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன

தாய் நிலம் சஞ்சிகைக்கு தரமான ஆக்கங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன. ஆக்கங்களை தட்டச்சு செய்து எமது கீழ்க்காணும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பலாம்.

**Email:- thaainilamnews@gmail.com**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறுங்கதை



# மெய்யாலுமோ...!

குஞ்சக்கா

அடிபிள்ள ஏன் இன்னும் குஞ்சக்காவ காணல நேரமும் மூண்டாகுது என்ன பணியாரமா சுடுறாள். நீவாடி தலையெல்லாம் ஒரே கடி பேனைப்பாரன். இந்தாண வாறன் அந்த மனுசியும் என்ன செய்யுதுது இவ்வளவு நேரமும். எடி புள்ள படலைப்பக்கம் யாரடி கதைச்சுக் கேக்குது ஓமணை அது குஞ்சக்காதான் வாறா இண்டைக்கு என்ன கதை கொண்டுவாறாவெண்டு பாப்பம். எடிபிள்ளை இன்னும் பேன்பொறுக்க தொடங்கேலையோ..? குஞ்சக்கா. உன்னத்தான் பாத்துக் கொண்டு நிண்டனாங்கள் ஏனடி குஞ்சக்காட்ட என்ன திரவியமா கிடக்கு இல்லையக்க ஊரில நடக்கிறதுகள் உங்களுக்குதான தெரியும் உங்கட காதுக்கும் மூக்குக்கும் மணத்துப் போடுமல்ல அதுதான் கேட்டனான்.

உந்த விசர்கதைய விட்டுட்டு இந்த பேன்சீப்பை எடு இருங்கடி வரிசையா ஒருத்தீன்ர தலைய இன்னொருத்தி பாக்கணும் அப்பத்தான் ஊரில் தொலைவாரமெல்லாம் அவுத்துவிடுவன். அப்ப இண்டைக்கும் பலகாரம் இருக்கெண்டு சொல்லுறியள். ஓமடி பிள்ளை உவன் சொக்கன்ர மேளின்ர கதைதான். என்னக்கா சொக்கன்ர பிள்ளை ரவுணுலையல்ல படிக்கிறா இங்க இருந்தா கெட்டுப் போடுமெண்டு அவையள் ரவுணுல வீடெடுத்தல்ல பிள்ளைய படிப்பிக்கினம். அவரன்ர விண்ணாம் ஒடுறமாடு உள்ளுரல உழாாம் வெளியூருலதான் உழுமாம் எண்ட கதையாத்தான் கிடக்கு. வாயில



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லா வருகுது. அவளின்ர கதையை விட்டுட்டு நீசொல்லக்கா

உவன் சொக்கன் மனிசின்ற கதையை கேட்டு பிள்ளைய ரவுணுல விட்டு படிப் பிச்சவன்தானே அங்க அவள் ஒருத்த னோட காதலாம். என்னக்கா காதலெண் டால்பெரியவிஷயமா? பொறடி பொறடி நீ ஆடுஅறுக்க முன்னம்...! சரி சரி சொல்லக்கா படிக்கபோன இடத்துல ஒருத்தனோட காதல் காலெண்டா காதலாம் உந்த போனும் கையுமாதான் இருந்தாளாம். இப்ப எண்டால் அவள் மூண்டுமாசமாம் என்னடியக்கா மெய் யாலுமோ...? ஓமடி தங்கம் இப்பத்த பெடிபெட்டையளுக்கு எல்லாத்துக்கும் அவசரம் முதல்நாள் காதல் இரண்டாம் நாள் சுற்றுலா மூண்டாம் நாள் தனிமை யில குசுகுசுப்பு நாலாம் நாள் சூடு தணிப்பு அஞ்சாம் நாள் ஓகே பாயாம் இதுதானடி இப்பத்த காதல்.

சொக்கற்ற மகள் திரிஞ்ச திரியைப் பாரன் பம்பிடி சிங்கியா திரிஞ்சவாதானே இப்பதெரியும் சொக்கற்ற மனிசி ஊரில உள்ளவையளின்ர விண்ணாணங்கள தன்ர அம்மியில போட்டு அரைச்ச வாதானே இப்ப அவான்ர விண்ணா ணத்தை ஊர் அரைக்குது. பிள்ளைய வழக்கத்தெரியா பெத்ததுகள். உந்த கண்டறியாத ரெலிபோன் வந்துதான் இவ்வளவும். சொக்கன்ர மனிசிக்கு இப்ப எத்தின வயது தானும் குமர்மாதிரி ஒரே போன்தானாம் எடி என்னவோ சொல்லுவாங்கள் அந்த சட் பண்ணுற தாம் அந்த கோதாரியை இவளும் செய் யுறதாம் அவான்ற பள்ளிக்குட பெட்டை யள்இப்ப குறூப்பில இருந்து இதுதானாம் செய்யிறது சொக்கருக்கு ஒழுங்கா சாப்பாடு கூட கொடுக்கிறேலயாம். தாய் அப்படியெண்டால் பிள்ளையள் எப்படி இருக்கும் வயதுக்கு ஏற்ற நடை உடை இருக்கணும். இதை விட்டுட்டு பிள்ளை யளின்ர கையில போனைக் கொடுத்திட்டு அவள் படிக்கிறதுக்குதான் போன்ற எண்டு பாக்கமால் இருந்தால் இந்த கண்றாவிதான் நடக்கும்.

குஞ்சக்கா இப்ப உலகம் மாறிப்போச்சு போன்ற இல்லாட்டி ஒண்டும் செய்யே லாது. எடியே எனக்கு வாயில வருது...! உலகத்தோட ஒத்தோடத்தான் எங்கட முன்னோர் சொன்னவை அதை இல்லை யெண்டு சொல்லேல மூதேவியளே...! நல்லத எடுங்கோவன் எங்க எங்க கெட் டதுகள் இருக்கோ அதுகளயல்லே எடுக்கிறயள். அடுத்தவையின்ர வேலிக் குள்ள எண்ண நடக்குதெண்டு பாக்குறத விட்டுட்டு எங்கள் வீட்டுக்க குசினிக்க என்ன இருக்கெண்டு பாக்கணும். பிள் ளைய படிப்பிக்கிறனெண்டு பட மெடுத்து அதுகள பாழும் கிணத்தில விழுத்துறது இந்த வெங்காயங்கள்தான். அதுகளுக்கு நல்லது கெட்டது எண்டு எடுத்துச் சொல்லிக் கொடுக்கினமோ இல்லை நாங்கள் சொல்லத்தான் விடு கினமோ நீங்கள் பழசுகள் உங்கட கால மல்ல இதெண்டு எண்ட வாயை அடைக் கினம் பிறகென்னண்டு பிள்ளையள் ஒழுங்கா வளரும். சரி அதை விடக்கா இப்ப என்ன நிலையாம். வேற யென்ன அவன் வயித்தில பிள்ளைய கொடுத்திட்டு கனடா ஓடிட்டானாம் இவ ஒருத்தருக் கும் தெரியாமல் கலைப்பமெண்டு கலைச்சிட்டினமாம். உதுகளுக்கு துவ ரங்கம்பு முறித்து விளாசவேணும். எடி பிள்ள நானும் கதைகண்ட இடம் கைலாயமெண்டு இருந்திட்டன் நேரமாச்சு போட்டு வாறன்பிள்ள.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கட...
# யாழ்ப்பாணத்தான்!






**திருவுடையார்**
நல்லூர்.

இலங்கையின் புவியியல் அமைப்பில் அதன் தலைப்பகுதி யாழ்ப்பாணம் என்று அழைக்கப்படுகிறது. இந்த பிரதேசத்தில் வாழ்பவர்களை 'யாழ்ப்பாணத்தார்' என ஏனைய பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் அழைப்பது வழக்கம். இந்த வழக்குச் சொல்லில் 'யாழ்பாணத்தான்' என்ற சொற்பிரயோகமும் பாவிக்கப்பட்டு வருகிறது. யாழ்ப்பாணத்தான் என்ற சொல்லின் பொருள் பல்வேறு வகைகளில் அர்த்தப்படுத்தப்படுகிறது. யாழ்ப்பாணத்தான் என்றால் திமிர் பிடித்தவன் என்றும், அடங்கமாட்டாதவன் என்றும், எதைப் பற்றியும் கவலைப்படாமல் அசண்டையீனமாக இருப்பவன் என்றும், பூர்வீக அடையாளம் உள்ளவன் என்றும், அர்த்தப்படுத்தப்படுகிறது. இதனைவிட மேட்டுக்குடி மேலாண்மைத்தன்மையென்றும் அர்த்தம் கொள்ளப்பட்டிருக்கிறது. மேற்குறிப்பிட்ட நடத்தைக் கோலங்கள் இங்குள்ளவர்களில் அதிகம் இருப்பதனால் அப்படி அழைக்கப்பட்டிருக்கிறது. இது யாழ்ப்பாணத்தவர்களின் அடையாளமாகக் கூட இருக்கலாம்.

யாழ்ப்பாணம் என்றால் பல்வேறு நாடுகளாலும் விழித்துப் பார்க்கப்படுகின்ற பிரதேசம் ஆகும். தொன்மையான காலம் முதல் இன்று வரை இந்த மண்ணில் பிறந்தவர்கள் நிகழ்த்திய சாதனைகளே இதற்கு காரணமானது. கல்வியிலும் ஒழுக்கத்திலும், நெறிமுறையான வாழ்க்கையிலும், வீரத்திலும் சிறந்தவர்கள் யாழ்ப்பாணத்தார் என ஒரு அடையாள இடுகை இருந்துவருகிறது. இது தனிப்பட்ட ஒரு மாவட்டத்தை தூக்கிப்பிடிக்கும் நிலையல்ல வரலாற்றில் அறிப்பட்டு வருவது. இந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்ப்பாணத்தான் என்ற அடை மொழி அல்லது திமிர் மொழியின் பின்னால் பல கதைகள் உள்ளன. யாழ்ப்பாணத் தானுக்கு காச்சல் வந்தால் கூட உலகத் துக்கு தெரிந்துவிடும் என்று கிராமங் களில் நக்கலாக சொல்வது வழக்கம் அந்தளவுக்கு யாழ்ப்பாணம் உன்னிப் பாக கவனிக்கப்பட்டு வரும் ஒரு மாவட்ட மாகும். இந்த மண்ணில் பிறந்தவர்களின் மண்வாசனை கொண்டவர்களையே யாழ்ப்பாணத்தான் யாழ்ப்பாணத்தார் என்று அழைக்கப்படுகின்றது. இன்றும் இந்த யாழ்ப்பாணத்தான் என்ற அடைக்கு பொருத்தமானவர்கள் இருக் கிறார்களா என்றால் ஆம் இன்றும் அந்த அடையாளங்களோடு வாழ்ந்து வருகிறார்கள்.


யாழ்ப்பாணத்தான் என்பவன் எந்தவித சலசலப்பும் இன்றி ஆடம்பர மும் இன்றி அமைதியாக எதையும் அசண்டையீனமாக பார்க்கும் குணம் கொண்டவனாக காணப்படுகிறான். நல்ல உழைப்பாளி உடல் உழைப்பினை நம்பி வாழும் தன்மை கொண்ட இவன் எதற்கும் வளைந்து கொடுக்காதவனாக இருக்கிறான். இத்தகைய தன்மை கொண்டவர்கள் தான் யாழ்ப்பாணத்தார் என்று அழைக்கப்படுகிறார்கள். நிறைய படித்திருந்தாலும் அதனை வெளியில் காட்டாது மிக எளிமையான வாழ்க்கை முறையினை வாழ்ந்து வருபவர்கள். இது சாதியரீதியாக அன்றி பொது நோக்கில் யாழ்ப்பாணத்தில் உள்ள ஒவ் வொரு சாதிக்குள்ளும் அதன் சாதித் தடிப்பு என்பது இன்றளவும் இருந்து வருகின்றது. இந்த தடிப்பு குணம் தான் யாழ்ப்பாணத்தான். இலங்கையில் இரண்டு இடங்கள் இப்படியான தன்மை கொண்டது ஒன்று யாழ்ப்பாணம் மற்றது கண்டி. கண்டியில் உள்ள சிங்களவர்கள் உயர்ந்தவர்களாகவும் கரையோரங்களில் உள்ளவர்கள் தாழ்வர்களாகவும் கருதும் வழக்கம் இன்றளவும் இருந்து வருகிறது. வடக்கில் யாழ்ப்பாணத்தானுக்கு இருக்கிற தடிப்புப் போலகண்டியில் உள்ள சிங்களவர்களுக்கும் தடிப்பு குணம் என்பது உள்ளது. இது அவர்களின் பூர் வீகத்தால் வந்தது. யாழ்ப்பாணத்தான் என்ற தடிப்புக்கு இன்னொரு காரணத் தையும் சொல்லலாம். உலகில் ஒரு பிரதேசம் தனக்கென தனித்துவமான சட்டத்தினையும் (தேச வழமைச்சட் டம்) தனது பேச்சு வழக்கு, எழுத்து வழக் குக்கென தனியான அகராதியினையும் (யாழ்ப்பாண அகராதி) கொண்டிருக்கிற தென்றால் அது யாழ்ப்பாணம்தான் அதனாலும் அந்த தடிப்பு ஏற்பட்டிருக்க லாம். எது எவ்வாறாயினும் இன்றைய சிந்தனையாளர்கள் இதனை பிற்போக் குத்தனம் என குற்றம் சாட்டினாலும் அந்த யாழ்ப்பாணத்தனிடம் இருந்த கட்டுக்கோப்பு அந்த தடிப்புதான் அவனை உலக அரங்கில் தெரிந்தவனாக காட்டியிருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முல்லைத்தீவின் சாதனை மைந்தன் அல்பேட் விக்ரர்

சி.தில்லைச்சிவன்
முல்லைத்தீவு




SKDUN ஷோடோகன் கராத்தே-டோ ஐக்கிய நாடுகளின் அதிகாரப்பூர்வ நாடு இயக்குனர் குறிப்பு விதிமுறைகளில் கூறப்பட்டுள்ள SKDUN இன் மதிப்புகள் மற்றும் கொள்கைகளின்படி ஷோடோகான் கராத்தேவை மேம்படுத்தவும், இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தவும், விக்ரர் டலஸ் ஆல்பிரட், ஐக்கிய நாடுகள் சபையின் உலகக் கூட்டமைப்பின் கராத்தே-டோவை பிரதிநிதித்துவப்படுத்துவதட்காக ஷோடோகானின் பணிப்பாளர் சபையால் நியமிக்கப்பட்டுள்ளார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஏன் எழுதவேண்டும்? எதற்காக எழுதவேண்டும்?

இந்தக்கேள்வியோடு தொடங்குவதே சரியானதாக இருக்கும். அச்சியந்திரத்தின் வருகையின் பின்னர் ஏற்பட்ட நவீன தொழில்நுட்ப வளரச்சி அச்சுத் துறையிலும் பாரிய வளர்ச்சியினை ஏற்படுத்தி இருக்கின்றது. எழுதுவதை இலகுவாக நூலுருவாக்கம் செய்யும் வகையில் இன்றைய பதிப்புக்கள் வளர்ச்சிகண்டுள்ளது. ஆனால் நாம் நூல்களை வாசிப்பதை குறைத்துவருகின்றோம். இது ஆரோக்கியமானதல்ல ஒரு சமூகத்தின் அறிவியல் ஆத்மாவே நூல் வாசிப்பில் இருந்துதான் முளைக்கிறது. அந்த முளையினை வீரியம் மிக்கதாக ஆக்குவதுதான் நல்ல நூல்கள். நல்ல நூல்களை தேடிக் கற்பதன் மூலம் நாம் பல விடயங்களை அறிந்து கொள்கின்றோம்.

இந்த அறிதலின் வழியேயான தேடலே என்னை இந்த தொடரினை எழுதுவதற்கு தூண்டியது. ஈழமணித்திருநாடு தன்னிகரில்லாத ஒரு பூமியாகும் உலகின் மற்ற நாடுகளைவிட ஈழத்திற்கென்று ஒரு தனிச்சிறப்பும் கௌரவமும் உண்டும். இந்தியத்துணைக்கண்டப்பகுதியில் இருந்து கடல்கோளினால் மூழ்கிப்போன லெமூரியா கண்டத்தின் எச்சிய பகுதியாக இருப்பது ஈழம்தான். மிகத் தொன்மையான வரலாற்று மூலங்களைக் கொண்டது இந்தமண். ஆதித் தமிழர்களின் எச்சமும் நாகர் வழிபாடுகளின் எச்சங்களும் இரும்புக்காலத்து எச்சங்களும் இந்த மண்ணில் இருந்துதான் கிடைக்கின்றன. தமிழர்களின் குடிசனப்பரம்பல் இந்த மண்ணின் அனைத்து திசைகளிலும் இருந்திருக்கின்றது என்பது ஒரு வரலாறு. அந்த வரலாற்றினை அறியவும் அதனை பாதுகாக்கவும் பல்வேறு முயற்சிகள் நடைபெற்று வருகின்றன.

இலங்கையின் வடபுலம் என்பது செறிவான தமிழர்களின் குடிப்பரம்




பலைக் கொண்ட ஒரு பிரதேசம் ஆகும். தொன்மையான பல வரலாற்றுச் சான்றுகள் இப்பிரதேசங்களில் இன்றும் காணப்படுகின்றது. இங்கு ஏற்பட்ட நீண்டகால யுத்தம் எமது சிந்தனைகளையும் செயற்பாடுகளையும் மாற்றி இருக்கின்றது. நாம் எமது வேர்களைத் தொலைத்திருக்கின்றோம். எமது தலைமுறைத் தொடர்ச்சிகளை அறியாது இருக்கின்றோம். இங்கு பொதுவாக ஒருவருக்கு மூன்று தலைமுறைகளுக்கு மேல் தனது தலைமுறைச் தொடர்ச்சி தெரிவதில்லை. யுத்தம் எமது வாழ்வியலின் பல்வேறு பகுதிகளை அழித்துச் சென்றிருக்கின்றது.

யுத்த்ததின் பின்னரான வாழ்வியல் என்பது மீள் காட்டுமானத்தின் இருந்து ஆரம்பித்தாலும் எமது அடையாளங்களையும் வரலாறுகளையும் பாதுகாத்து அதன் கட்டமைப்புக்களைப் பேணி அவற்றினை அடுத்த தலைமுறையினைருக்கு கையளிக்கும் நோக்கிலும் எமது செயற்பாடுகள் அமையவேண்டும். இன்று உள்ள தலைமுறையினருக்கு முப்பதாண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலம் நடந்த யுத்தம் பற்றியும் அதன் வரலாறு பற்றியும் கூட தெரியாமல் இருந்திருக்கின்றது. சுமார் நாற்பதாண்டு கால வரலாற்றினைக் கூட தெரியாத ஒருதலைமுறை எம்மிடத்தில் உள்ளது.

வரலாற்றினை பாதுகாத்தல் அல்லது வரலாற்றினை வருகின்ற தலைமுறையின ருக்கு அறிமுகம் செய்தல் என்னும் நோக்கில் பலசெயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டிய தேவை எம்மிடத்தில் உள்ளது. இங்கு வரலாறு என்பது வெறுமனே நிலம்பற்றிய வரலாறாகவோ வாழ்வியல், கலை, பண்பாடு பற்றிய வரலாறாகவோ மட்டும் இருக்காது இந்த நிலத்தில் வாழ்ந்த மனிதர்களின் வரலாறுகளும் பதியப்பட வேண்டி தேவை உள்ளது.

ஈழமண் பல அற்புத மனிதர்களை கண்டிருக்கின்றது. பல ஆன்றோர்கள், சான்றோர்கள் என்பதற்கு அப்பால் சாதனையாளர்களும் வீரர்களும், விவேகிகளும் புத்திஜீவிகளும் வாழ்ந்திருக்கின்றார்கள், வாழ்ந்து வருகின்றார்கள் இவர்கள் பற்றிய பதிவினை ஒரு வரலாற்று தொகுப்பாக எழுதுவதன் மூலமே எமது அடையாளங்களை பாதுகாக்கமுடியும் என்னும் நோக்கில் இந்த மண்ணில் நடந்த சம்பவங்கள், இங்கு வாழ்ந்த மனிதர்களின் வரலாறுகள்என்பவற்றினை ஒரு பதிவாக கொண்டு வரவேண்டும். அடுத்து வருகின்ற தலைமுறை இந்த பதிவுகளை கற்பதன் மூலம் இந்த மண்ணின் பெருமைகளையும் இங்கு வாழ்ந்த உயர்ந்த மனிதர்கள் பற்றியும் அறியக் கூடியதாக இருக்கும்.

சிதைந்துபோன தேசத்தில் இருந்து மீண்டெழுந்து வருகின்றோம். எமது மீள் எழுகையில் தொன்மங்களைத் தொலைத்தவர்களாக நாம் இருந்துவிடக் கூடாது. எமது முதுசங்களை நாம் அறியவேண்டும் என்ற நோக்கில் எமது மண்ணில் வாழ்ந்த சாதனையாளர்களின் வரலாறுகளை தொகுக்க வேண்டிய தேவை ஏற்பட்டபோதுதான் ஒவ்வொருவர் பற்றியும் தனி நூலே எழுதக்கூடிய அளவிற்கு அவர்கள் பற்றிய தகவல்கள் நிறைந்து கிடக்கின்றன. எனவே அவற்றினை உரியவாறு பதிவுசெய்து எமது மாண்புக்குரிய மனிதர்களை, அவர்களின் வாழ்வியல் மற்றும் சாதனைகளை இளந்தலைமுறையினருக்கு அறிமுகப் படுத்துவதன் மூலமே எமது வருந்தலைமுறையினை ஆரோக்கியமான தலைமுறையாக உருவாக்க முடியும். எனவே எனது இந்த முயற்சிக்கு நான் முதலில் இட்ட தலைப்பே ஏன் எழுத வேண்டும், எதற்காக எழுதவேண்டும் என்பதாகும். இந்த இரண்டு கேள்விக்கான விடையினை நான் மேலே குறிப்பிட்டிருக்கின்றேன்.

இது ஒருவரலாற்றுப் பதிவாகும். இலங்கையின் வடபுலத்தில் இருக்கின்ற முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள ஒரு கிராமத்தில் பிறந்து வளர்ந்து இன்று புலம்பெயர்ந்த தேசத்தில் பல சாதனைகளைப் புரிந்திருக்கின்ற ஒரு சாதனையாளனின் வரலாறும் அவனது சாதனைகளும் அவனது பிறந்த மண்ணில் இருந்து ஆரம்பிக்கின்றது.

**சாதனை மைந்தனின் தாயவள்பூமி**

நான்எழுத இருக்கும்சாதனையாளரின் பிறந்த மாவட்டம் முல்லைத்தீவு ஆகும். இங்கு முல்லைத்தீவு பற்றிய வரலாற்று செய்திகளை குறிப்பிடும் ஒரு வரலாற்று ஆவணம் இதுவல்ல. நான் ஆவணப் படுத்த முனைந்த ஒரு சாதனையாளின் பிறந்த மாவட்டம் இந்த மாவட்டம் ஆகையால் இந்த மாவட்டம் பற்றிய ஒரு சிறு அறிமுகத்தினை தருகின்றேன்.

இலங்கையின் நிர்வாக நிலப்பிரிவுகளில் வடமாகாணத்தில் உள்ள ஐந்து மாவட்டங்களில் ஒன்றுதான் முல்லைத்தீவு மாவட்டம் ஆகும். முல்லைமண் என்று சிறப்பிக்கப்படுகின்ற இந்த மாவட்டம் ஒரு தொன்மையான வரலாற்று மாவட்டம் ஆகும். கடலும், வயலும், காடும் சார்ந்த பிரதேசமாக விளங்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த மாவட்டத்தின் வடக்கே கிளிநொச்சியையும் கிழக்கே இந்து சமுத்திரத்தையும் மேற்கே மன்னாரையும் தெற்கே திருகோணமலை மற்றும் வவுனியாவையும் எல்லைகளாகக் கொண்ட மாவட்டம் ஆகும். வன்னிப் பெருநிலப்பரப்பு என்ற வரையறைக்குள் முல்லைத்தீவு, வவுனியா மன்னார் ஆகிய மூன்று மாவட்டங்கள் வருகின்றன.

ஒல்லாந்தர் ஆட்சிக் காலம் முதல் அடங்காப்பற்று என்று அழைக்கப்படும் மாவட்டமாக முல்லைத்தீவு மாவட்டம் டி விளங்குகின்றது. கடல்சார்ந்த வாழ்வியல், வயல் சார்ந்த வாழ்வியல், காடுசார்ந்த வாழ்வியல் என்று மூன்று வகையான வாழ்வியல் முறைகளைக் கொண்ட மாவட்டமாக முல்லைத்தீவு மாவட்டம் விளங்குகின்றது. தமிழர்களின் நாகர் வரலாற்றுக்குரிய பல வரலாற்றுச் சான்றுகளையும் தொன்மங்களையும் கொண்டு விளங்கும் இந்த மாவட்டம் மக்கள் வாழ்வியலிலும் தனித்த இடத்தினை பெறுகின்ற மாவட்டமாக விளங்குகின்றது. அடங்காப்பற்று என்ற சொற்றொடருக்கு ஏற்றாவாறான வீரம்செறிந்த வாழ்வியலைக் கொண்ட மாவட்டமாகவும் இது விளங்குகின்றது. தமிழர்களின் புராதன கலைமரைபுகளைப் பேணுகின்ற மாவட்ட மாகவும் இது விளங்குகின்றது. இசைநாடக மரபில் முல்லைமோடி என்று சிறப்பாக அழைக்கப்படுகின்ற முல்லைத்தீவு மாவட்டத்திற்கே உரிய ஆட்ட முறைகளைக் கொண்ட இசை நாடக மரபு ஒன்று இப்பிரதேசத்தில் இன்றும் நிலவிவருகின்றது. கலை, இலக்கியம், விளையாட்டு. வீரம், பாரம்பரிய வாழ்வியல் முறைகள் என பல்துறைகளிலும் தமிழர்களின் பல்வேறு அடையாளங்களைப் பேணிவருகின்ற ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த மாவட்டத்தில் தான் விக்டர் எனும் சாதனையாளன் பிறந்திருக்கின்றான்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரத்துறைப்பற்று பிரதேசசெயலர் பிரிவுக்கு உட்பட்ட வண்ணான்குளம் என்பதுதான் விக்டர் அவர்களின் கிராமம் ஆகும். முல்லைத்தீவின் நகரத்தினை ஒட்டி அமைந்திருக்கின்ற ஒரு மீனவகிராமமாக இது விளங்குகின்றது. ஆழ்கடலும் அதனோடு ஒட்டிய மீனவ வாழ்வியலும் நிறைந்த நகரத்துக்கு அண்மித்த கிராமத்தில்தான் சாதனையாளன் விக்டரின் பிறப்பு நிகழ்ந்திருக்கின்றது,

நான் ஏலவே குறிப்பிட்டது போல முல்லைத்தீவு மாவட்டம் பல பண்பாட்டுச் சூழல்களையும், வாழ்வியலையும் கொண்ட ஒரு பழமையான மாவட்டமாகும். இந்த மாவட்டத்தில் உள்ள வண்ணான் குளம் எனும் இந்த கிராமம் மீனவ வாழ்வியலையும் அதன் பண்பாட்டுச் சூழலையும் நிறையவே பொருந்தி இருந்த இன்றும் இருக்கின்ற ஒரு கிராமமம் ஆகும். ஈழத்து வரலாற்றுச் செல்நெறியில் ஒவ்வொரு கிராமங்களும் ஒவ்வொரு வகையான பண்பாட்டுச் சூழலமைவுகளையும் வரலாற்றுத் தொன்மங்களையும் கொண்டிருக்கின்றன. நீண்ட நெடிய யுத்தம் இந்த வரலாறுகளையும் அதன் பண்பாட்டுச் சூழலமைவுகளையும் அறிய முடியாமலும் ஆய்வுக்கு உட்படுத்தமுடியாமலும் போய்விட்டன. ஈழத்தின் ஒவ்வொரு கிராமங்களுக்கும் ஒவ்வொரு வரலாறுகளும் பண்பாட்டு விழுமியங்களும் தனித்துவமாகவே இருந்திருக்கின்றன. எமது பண்படைய வாழ்வியல் பற்றிய பறைசாற்கைகளுக்கு அப்பால் நாம் சுமார் நாற்பது ஆண்டுகளுக்கு மேலான எமது வாழ்வியலின் பண்பாட்டுச்சூழல்களை அறிந்து கொள்வதிலும் அதனை ஆய்வுக்கு உட்படுத்துவதிலும், ஆவணப்படுத்துவதிலும் அதிக கவனம் செலுத்தவேண்டிய காலத்தில் உள்ளோம். எனவே எமது வாழ்வியல் முறைமைகளையும் அதன் பண்பாட்டுச் சூழல்களையும் கிராமங்களில் எவ்வாறு இருந்தது என்பதை ஒவ்வொரு கிரா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மத்தின் வரலாற்றின் பின்புலத்தில் இருந்தும்நாம்அறிந்து கொள்ளமுடிகிறது.

இத்தகைய ஒரு பின்புலத்தின் அடையாளப்படுத்தலுடன் விக்டரின் வராலாற்றினையும் நாம் அணுகவேண்டி உள்ளது. விக்டரின் வரலாற்று பதிவு என்பது வெறுமனே ஒரு சாதனையாள னின் வரலாற்றுப் பதிவாக மட்டும் இருக்காது அவரது வாழ்வியல் ஊடு காணப்படுகின்ற பண்பாட்டுச் சூழல்கள் வரலாற்றுச் செய்திகள் அவரது சாதனை கள் என்பவற்றினை அறியும் நூலகவே இந்த நூல் அமைகின்றது. எனவேதான் விக்டர் அவர்களின் சாதனை வரலாறு என்பது ஒரு தனிமனிதனின் சாதனை வரலாறாக அல்லாமல் ஒரு சமூகத்தின் சாதனை வரலாறாகவே அமைகின்றது. ஒரு மண்ணின் மகத்தான் நிகழ்வுகள் அந்த நிகழ்வு நடந்த காலப்பகுதியிலேயே ஆவணப்படுத்தப்பட வேண்டும் அப்போதுதான் அது வரலாறாகும். அந்த வரலாற்று வழித்தடத்தில் ஒரு சாதனையாளின் வரலாறும் முல்லையின் வரலாற்றோடு இணைகின்றது.

ஒல்லாந்தர் காலத்தில் இருந்து ஆரம்பிக்கின்ற வன்னியின் வரலாறு ஒரு வீரவரலாறாகவே பதியப்பட்டிருக் கின்றது. யாழ்ப்பாணத்தின் அரச அடையாளமாக சங்கிலியனைக் குறிப்பிடுவதுபோல முல்லைத்தீவின் அரச அடையாளமாக பண்படாரா வன்னியன் குறிப்பிடப்படுகின்றான். அடங்காப்பற்று எனும் அடைமொழி எவருக்கும் அடங்காத வீரம் என்ற பொருளினைக் குறிக்கின்றது. எனவே அடங்காத்தமிழன் என்ற புனைவும் இந்த மண்ணும் பிரதேசத்திற்கும் பொருந்துவதாகவே உள்ளது. எனவே வீரமும் தீரமும் நிறைந்த இந்த மண்ணின் மைந்தர்கள் வீரம் செறிந்தவர்களாகவே இருந்திருக்கின்றார்கள் என்பதை நாம் இந்த மண்ணின் பல்வேறு வர லாற்று செய்திகளில் இருந்தும் அறிய முடிகின்றது.

ஒல்லாந்தர் காலத்திற்கு முன்பிருந்தே இந்த மண்ணுக்குரிய புராதன வரலாறு என்பது இருந்திருக்கின்றது. அது நாகர் இனத்தோடு தொடர்புபட்டிருக்கின்றது என்று வரலாற்று ஆய்வாரள்கள் குறிப் பிடுகின்றனர். எனவே மிகத்தொன்மை யான வராலாற்றுப் பரப்புக்களைக் கொண்ட முல்லைத்தீவு மாவட்டம் ஒரு தனித்துவமான தமிழர்களின் மாவட்டம் ஆகும். இத்தகைய தனித்துவம் கொண்ட மாவட்டத்தின் ஒவ்வொரு கிராமங்களும் பல வரலாற்றுப் பின்புலத்தோடுதான் இருந்திருக்கின்றது. பெரிய, சிறிய குளங்களைக் கொண்ட மாவட்டமாக வும் விளங்குகின்ற இந்த மாவட்டம். நெய்தல், முல்லை, மருதம் என்ற மூன்று வகையான நிலப்பிரவுகளைக் கொண்டி ருக்கின்றது. இந்த மூன்று வகையான நிலப்பிரவுகளுக்கும் ஏற்றவாறான வாழ்வியல் முறைகைளையும் கொண்டி ருக்கின்றது.

இத்தகைய மூன்றுவகையான வாழ் வியல் முறைகளில் கடலும் கடல்சார்ந்த பகுதியும் என வரலாற்றில் குறிப்பிடப் படும் நெய்தல் நிலப்பிரதேசம் ஏனைய பிரதேச வாழ்வியல் முறைகளில் இருந்து மாறுபட்ட வாழ்வியல் முறைகளைக் கொண்ட ஒரு பிரதேசம் ஆகும். கடலும் கடல்சார்ந் பிரதேசமாகவும் விளங்கும் இந்த பிரதேசம் மணல் பிரதேசம் ஆகவும் வெப்பம் கூடியபிரதேசமாகவும் இதன் புவியியல் அமைப்பு காணப்படுகின்றது. புவியில் அமைப்பினை ஒட்டியே வாழ்வியல்முறைகளும் அங்கு வாழுகின்ற மனிதர்களின் நடத்தைமுறைகளும் அமைந்தது என்பது பண்பாட்டு ஆய்வியலின் முடிபாகும்.

வண்ணான் குளம் என்ற கிராமம் ஒரு கடற்கரை பிரதேசமாகையால் இந்த பிரதேசத்தில் வாழுகின்ற பெரும்பாலான வர்களின் தொழிலாக மீனவத்தொழிலே காணப்படுகின்றது. மீனவத்தொழிலும் மீனவ சமூகமும் தமிழர்களின் ஆதி குடி வாழ்வியல் ஆகும். இன்றுவரையும் தனது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடையாளங்களைத் தொலைக்காது வாழுகின்ற ஒரு ஆதிக்குடி வாழ்வியலாக மீனவ வாழ்வியல் விளங்குகின்றது.

மீனவ வாழ்வியலுக்கு என்று தனித்த பண்பாடு சடங்குமுறைகள் என்று நிறையவே இருந்திருக்கின்றது. இலங்கையினை அந்நியர் கைப்பற்றும் வரை இந்த மண்ணின் கரையோரங்களில் வாழ்ந்தவர்கள் அனைவரும் சைவம், பௌத்தம் ஆகிய சமயங்களைச் சார்ந்தவர்களாகவே இருந்திருக்கின்றார்கள். இலங்கையினை அந்நியர் கைப்பற்றுதல் என்பது முதலில் கரையோரங்களை கைப்பற்றுவதிலேயே ஆரம்பித்திருக்கின்றது. எனவே முதல் அந்நியர் ஆளுகைக்குள் உட்பட்ட பிரதேசங்களாக விளங்கும் இலங்கையின் கரையோரப்பிரதேசங்களும் அங்கு வாழுகின்ற மீனவ சமூகமும் அந்த அந்நியர் ஆளுகைக்குள் வந்து அவர்களின் மதம், கலாசாரம் வாழ்வியல் முறைகளை அறிந்து அவற்றினை பின்பற்றுபவர்களாகவும் மாறி இருக்கின்றனர். இத்தகைய மாற்றமே இலங்கையின் கரையோரப்பிரதேசங்களில் இன்று பெருவாரியாக கிறிஸ்தவர்கள் வாழுகின்றார்கள். சோழர்களுக்குப் பின்னர் போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் என்ற பல நாட்டவர்களின் வருகையினை முதலில் எதிர்கொண்டவர்களாக இந்த கரையோர பிரதேச மக்கள் இருக்கின்றனர்.

தொன்மையான தமிழர்களின் அடையாளங்களில் இருந்து மருவி காலத்திற்கேற்ப ஆட்சி செய்த ஆட்சியாளர்களின் பண்பாட்டு,மத ஆளுகைக்குள் உட்பட்டவர்களாக இந்த பிரதேச மக்கள் விளங்கியமையால்தான் இவர்களின் வாழ்வியல் முறைகள் என்பது தனித்துவமான பல பண்பாட்டு அம்சங்களைக் கொண்ட ஒரு வாழ்வியல் முறையாக இன்றும் இருந்து வருகின்றது. பெருவாரியான கிறிஸ்தவ மதச் சூழலில் அமைந்த மீனவ வாழ்வியல் முறை என்பது தமிழர்களின் தொன்மையான வாழ்வியல் முறையில் இருந்து விலகி அந்நிய பண்பாடுகளின் பிரதிபலிப்புக்களாகவே மாறி இருக்கின்றது. இத்தகைய மாற்றம் தமிழர்களின் ஆதி மீனவ பண்பாட்டுச் சூழலை இன்று அதிகம் அறியமுடியாமல் போனமைக்கும் அவற்றினை ஆவணப்படுத்த முடியாமல் போனமைக்கும் காரணமாகின்றன.

ஒரு மீனவ சமூகத்தின் வாழ்வியல் என்பது எதிர்நீச்சல் வாழ்வியலாகவே இருந்திருக்கின்றது. இன்றும் இருந்து வருகின்றது. புவியியல் அமைப்பும் கால நிலை மாற்றங்களும் இந்த பிரதேசங்களில் இருந்தவர்களுக்கு பெரும் சவாலாகவே அமைந்திருக்கின்றது. இப்பிரதேசங்களைவ வாழ்வியலுக்கு ஏற்றவாறான பிரதேசங்களாக மாற்றி வாழ்வதற்கு இவர்களுக்கு அதிக வலுதேவைப் பட்டிருக்கின்றது. புவியியலையும் காலநிலையினையும் தமக்கு சாதகமாக்கி அவற்றில் திசையினை நோக்கிய எதிர்நீச்சலாகவே இந்த பிரதேசத்தின் மக்கள் வாழ்வியல் அமைந்திருப்பதனால்தால் இயல்பாகவே இந்த பிரதேசத்தில் வாழுகின்றவர்கள் வீரியம் மிக்கவர்களாக இருந்திருக்கின்றார்கள். ஒவ்வொரு ஆட்சி முறைகளுக்கும் ஏற்றவாறான வாழ்வியலைக் கட்டமைத்த இவர்களின் பண்பாட்டு விழுமியங்களில் இன்றும் பல்வேறு ஆட்சியாளர்களின் தாக்கம் இருந்து வருகின்றது.

எனவே பண்பாடு சார்ந்த வாழ்வியல், இயற்கைசார்ந்த வாழ்வியல், மதம் சார்ந்த வாழ்வியல், மொழிசார்ந்த வாழ்வியல் என்று பல்வேறு வாழ்வியல் முறைகளைக் கொண்ட இவர்களின் வரலாறு என்பது வீரியம் மிக்கவரலாறாவே இருக்கின்றது. இந்த பிரதேசத்தில் பிறக்கின்ற குழந்தை முதல் இங்கு வாழுகின்ற முதியவர்கள் வரை வீரியம் மிக்கவர்களாகவும் துடிப்பு மிக்கவர்களாகவும் இருப்பதற்கு அவர்களின் புவியியல் சார்ந்த வாழ்வியல் முறைகளே காரணமாகின்றன. மீனவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூகம் அல்லது மீனவ வாழ்வியல் முறை என்பது கடலோடு சார்ந்த வாழ்வியல் முறையாகும். கடலும் கடல்சார்ந்த பொருளாதாரப் பின்புலத்தில் இருந்தும் கட்டியெழுப்பப்படுகின்ற இவர்களின் வாழ்வியலில் இவர்களுக்கென்று தனித்துவமான கலைகளும் நாட்டார் பாடல்களும் இசை வடிவங்களும் இருக்கின்றன. சடங்குகள் சடங்கு சார்ந்த செயற்பாடுகளை தொழிமுறைகளோடு தொடர்புபடுத்துவதும் இவர்களின் பண்பாட்டில் முக்கியத்துவமானது.

வீரமும் விவேகமும் கொண்டவர்களாலேதான் இப்பிரதேசத்தில் வாழலாம் என்பதை எமக்கு பண்டைய இலக்கியங்கள் கூட பறைசாற்றி இருக்கின்றன. ஆழமான ஒரு பண்பாட்டுப் புரிதல்களோடு அணுகவேண்டிய ஒரு மீனவ சமூகத்தின் வாழ்வியல் சூழலில் இருந்துதான் எமது சாதனையாளன் விக்டரின் பிறப்பும் நிகழ்ந்திருக்கின்றது. இவரது பிறப்பும் அவர் செய்த சாதனைகள் என்பது அவரது வாழ்வியல் பின்புலத்தில் இருந்து கிடைத்த உந்துவிசையினாலேயே நடந்திருக்கின்றது என்பதை காட்டுவதற்காகவே அவர் பிறந்த மாவட்டம் பற்றியும் அவரது கிராமம் மன்றும் அவரது பண்பாட்டுச் சூழல் பற்றியும் ஒரு அகப்பார்வை பார்க்க வேண்டி இருந்தது. ஒருவனது வரலாறு என்பது அவனது பண்பாட்டுப் பின்புலத்தில் இருந்துதான் எழுதப்பட வேண்டும். அப்போதுதான் அந்த மனிதனின் வேர்கள் அறுபடாமல் ஒரு வரலாற்றுத் தொடரச்சியை ஏற்படுத்தும். எனவேதான் விக்டர் அவர்களின் வரலாறும் அவரது பண்பாட்டுப்பின் புலத்தில் இருந்து நோக்கும்போதுதான் அவரது வெற்றிகளுக்கான மூலங்களை வாசகனாலும் ஆய்வாளனாலும் இலகுவாக கண்டுகொள்ளமுடியும்.

வண்ணான்குளம் என்ற கிராமத்தின் பெயரோ ஒரு பண்பாட்டுக் குறிசொல்லாகவே விளங்குகின்றது. இன்றுவரைக்கும் இந்த வண்ணான் குளம் எனும் இந்த கிராமம் பற்றிய ஆழமான ஆய்வுகள் எதும் மேற்கொள்ளப்படவில்லை. கடற்கரை கிராமான இது கடல்சார்ந்த தொழிலினை பல்வேறு வகையில் மேற்கொள்கின்றது. பருவகாலங்களுக்கு ஏற்ப மேற்கொள்ளப்படும் இறால் பிடித்தலுக்காக குறிப்பிட்டகாலங்களில் நிறைய படகுகள் கரைகளில் காணப்படும் அழகிய கிராமமே தனது கிராமம் என்று விக்டர் அவர்கள் தனது கிராமம் பற்றிய பசுமையான நினைவுகளைக் குறிப்பிடுகின்றார். அவர் சிறு பிள்ளையாக ஓடித்திரிந்த நினைவுகளும் அவரது இளமைக்கால கிராமிய வாழ்வியல் பற்றிய நினைவுகளையும் இன்றுவரை பசுமையாகவே தனது இதயத்தில் தேக்கிவைத்திருக்கும் வேர்களைத் தொலைக்காத ஒரு விருட்சமாக இன்று புலம்பெயர்ந்த தேசத்தில் நிலம்பற்றிய நினைவுகளோடு வாழ்ந்து வருகின்றார்.

மண்வாசத்தினை மறக்கமுடியாத அவரது நினைவுகள்தான் அவரை இந்த மண்ணுக்குரிய மைந்தராக அடையாளப்படுத்தவேண்டிய தேவை உள்ளது. நிலத்தில் வாழ்ந்த ஒரு மனிதனின் அந்த நிலத்தின் நினைவுகளோடு புலத்தில் இன்றும் வாழ்ந்து வருகின்றான் என்றால் அவனை நிலம் அறிந்திருக்க வேண்டும். அந்த நிலத்தின் ஒருகாலத்து வரலாறும் அதன் பண்பாட்டுச் செய்திகளும் அந்த மனிதனிடம்தான் இன்று இருக்கின்றது. அந்த வரலாற்று மூலங்களை எடுத்து ஆவணப்படுத்துவதன்மூலமே வண்ணான் குளம் என்ற கிராமத்தின் வரலாறு முழுமையடையும் என்ற நோக்கில்தான் இந்த பதிவு மேற்கொள்ளப்படுகின்றது. இது ஒரு நிலத்தின் வரலாறு மட்டுமல்ல நிலத்தில் வாழ்ந்தவனின் வரலாறும் அவன் புலத்தில் வாழும் வரலாறும் அடங்கிஇருக்கின்றது.

**(தொடரும்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# யாழ்ப்பாணத்து பலசரக்குக் கடை

கு.தில்லைச்சிவன்
சுன்னாகம்

யாழ்ப்பாணத்து வாழ்விலும் அதன் பண்பாட்டிலும் யாழ்ப்பாணத்தில் உள்ள பலசரக்குக் கடைகளுக்கு ஒரு நெருங்கிய தொடர்பு இருந்திருக்கிறது. போருக்குப் பின்னரான யாழ்ப்பாணத்து வாழ்வியல் பல்வேறு மாற்றங்களைச் சந்தித்திருக்கிறது. நவீனத்துவத்தின் வரவு ஆடம்பரமான வாழ்க்கைமுறை என்பன யாழ்ப்பாணத்து அடையாளங்களை மறைத்திருக்கிறது. இன்றைய யாழ்ப்பாணத்தில் வணிக நிறுவனங்களின் வரவும் எழுச்சியும் புதிய வடிவங்களில் காணப்படும் அதன் அமைப்பியலும் ஒரு நாகரீக கட்டுமானத்தினை காட்டுகின்றது.

யாழ்ப்பாணத்தில் உள்ள கடைகளின் அமைப்பிலும் அதன் செயற்பாடுகளிலும் பாரிய மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றது. குறிப்பாக யாழ்ப்பாணத்தில் இருந்த பலசரக்குக் கடைகள் என்பது இன்று அதன் வடிவங்களில் மாற்றங்களைக் கண்டிருக்கிறது. 'சுப்பர் மார்க்கட்' எனும் புதிய வடிவ விற்பனை முறை யாழ்ப்பாணத்தில் பல்வேறு பகுதிகளில் அறிமுகம் செய்யப்பட்டு அதன் வடிவம் மற்றும் விற்பனை முறைகளால் மக்களை கவர்ந்து வருகின்றது. இதனால் யாழ்ப்பாணத்தில் இருந்த பாரம்பரியமான பலசரக்குக் கடைகள் தேய்ந்துவரும் நிலை காணப்படுகின்றது.

ஒருகாலத்தில் பலசரக்குக்கடைகள் என்பது யாழ்ப்பாணத்து மக்களின் வாழ்வியலின் அடையாளங்களாகவே காணப்பட்டது. கடைகளின் பெயர்களாலும் கடை உரிமையாளர்களின் பெயர்களாலும் மக்களால் அறியப்பட்டவையாக மக்கள் மத்தியில் செல்வாக்குச் செலுத்தியவைகளாக இவை காணப்பட்டன. சிறப்பாக கிராமங்களில் பல சரக்குக் கடைகள் என்பது கிராமிய பண்பாட்டோடும் வாழ்வியலோடும் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தது. ஒரு கிராமத்தில் அல்லது ஒரு குடிசனப்பகுதியில் இருக்கும் கடையானது அந்தப்பகுதியில் வாழும் மக்களுக்கான பொருட்களை வழங்கும் நிறுவனங்காக இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த பலசரக்குக் கடைகள் மக்கள் மத்தியில் எவ்வாறான செல்வாக்கினைச் செலுத்தியதென்றால் ஒவ்வொரு குடும்பங்களுடன் நெருக்கமான உறவினை கொண்டதாக இந்தக் கடைகள் இருந்திருக்கின்றது. இதனால்தான் இக்கடைகளில் மக்கள் பொருட்களை வாங்கும் போது அங்கு பொருளுக்கு முக்கியம் கொடுப்பதை விட உறவுக்கு முக்கியம் கொடுத்திருக்கின்றார்கள். கடை முதலாளிகளின் அன்பான பழக்கம் ஒவ்வொரு குடும்பத்துடனும் நெருங்கிய தொடர்பினைக் கொண்டிருந்தது. கடையில் பொருட்களை வாங்குவதற்கு பணம் இல்லாவிட்டால் கடன் சொல்லிப் போகும் நிலையும் அதனை ஏற்றுக் கொள்ளும் நிலையும் இருந்திருக்கின்றது. பெரும்பாலான கடைகளில் வாடிக்கையாக பொருட்களை வாங்குபவர்களுக்கு தனியான கடன் கணக்கு பேணப்பட்டிருக்கிறது. பெரும்பாலான வீடுகளில் குறிப்பிட்ட கடையில் மட்டுமே பொருட்களை வாங்கும் பழக்கம் இருந்திருக்கின்றது. கடையில் பொருட்களை கடனுக்கு வாங்குவதற்காக அவர்கள் பயன்படுத்திய கணக்கு ஏட்டினை 'கடைக்கொப்பி' என்று அழைத்திருக்கின்றார்கள். சிறிய அளவிலான கணக்குப் பதியும் கொப்பி புழக்கத்தில் இருந்து ஒவ்வொரு தடவையும் கடைக்குச் செல்லும் போது அந்தக் கொப்பியோடு சென்று பொருட்களை காசில்லாமல் வாங்கி அதனை அந்தக் கொப்பியில் பதிந்து வருவார்கள். சிறியவர்களில் இருந்து பெரியவர்கள் வரை கடைக்குச் செல்லும் போது கடைக் கொப்பியுடன் சென்ற ஒரு வாழ்க்கை முறை இருந்திருக்கின்றது. கடையின் உரிமையாளர் வியாபாரத்திற்காக மட்டும் வாடிக்கையாளருடன பழகும் முறையில் அன்று இருந்திருக்கவில்லை. மாதமுடிவில் கடைக் கொப்பியில் வந்திருக்கும் தொகையினை செலுத்தும் நடைமுறை இருந்தது. இதனால் ஒவ்வொரு குடும்பத்திற்கும் என்ன பொருட்கள் எவ்வளவு தேவை என்ற தகவல் அந்த கடைக்காருக்கு இருந்திருக்கின்றது. அநாவசியமான பொருட்களையும் விலை அதிகமான பொருட்களையும் மக்கள் வாங்குப் போது அதற்கு அறிவுரை சொல்லும் வழக்கம் அக்கால கடைக்காரரிடம் இருந்திருக்கின்றது. பொருட்கள் தட்டுப்பாடு நிலவுகின்ற நேரங்களில் வாடிக்கையாளர்களின் தேவைகளுக்கென பொருட்களை தனியாக எடுத்து வைத்து அவர்களுக்கு மட்டும் வழங்கிய ஒரு பரிவான ஊடாட்டம் அக்காலத்தில் இருந்தது. கடைக்காரர் அல்லது அவரின் பெயராலோ அல்லது பட்டப்பெயராலோ அனைவராலும் அன்ப்பாக அழைக்கப்பட்டிருக்கிறார்கள் கடை முதலாளிகள் ஒருவருக்கொருவர் நம்பிக்கையினை பேணி காசில்லாத போது கடனுக்கு கொடுக்கும் முறை அக்காலத்தில் அதிகமாகவே இருந்தது. தேவையற்ற பொருட்களை வாங்குவதை ஒரு குடும்பத்தலைவன் போன்று தடுக்கும் உரிமையினையும் இவர்கள் பெற்றிருந்திருக்கிறார்கள். கடனுக்கு சாமான் வாங்கியதும் அந்த கடனை நீண்ட கால இடைவெளியில் கொடுக்கும் முறையும் அதனை ஏற்றுக் கொள்ளும் மனநிலையும் இருந்தது. ஒவ்வொரு குடும்பத்தின் நல்லது கெட்டதுகளில் பங்கு கொள்ளும் உறவுநிலை இதனால் இறுக்கம் கண்டிருக்கிறது. மக்களுக்கு தேவையான தரமான பொருட்களை வழங்கியிருக்கிறார்கள். பொருட்களை பாசல் செய்யும் முறையில் அவர்களின் அனுபவம் வெளிப்பட்டு இருக்கிறது. பொலித்தீன் பாவனை அதிகம் இல்லாத அக்காலத்தில் சீனி போன்றவற்றை ஒரு பேப்பரில் கையால் சுற்றி கூம்பு வடிவில் உருவாக்கி அதற்குள் அவற்றினை போட்டு சணல் கயிற்றினால் கட்டிக்கொடுக்கும் ஒரு முறை இருந்திருக்கின்றது. தேவையான பொருட்களை தேவையாள அளவில் கொடுத்திருக்கிறார்கள். ஒரு குடும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்திற்கு ஒரு மாதத்திற்கு இன்ன இன்ன பொருட்கள் தேவை என்ற விபரமும் ஒரு குடும்பத்தில் உள்ளவர்களுக்கு இன்ன இன்ன உணவுப் பொருட்கள் மற்றும் பாவனைப் பொருட்கள்தான் விருப்பம் என்ற தகவலும் அவர்களுக்கு தெரிந்திருக்கிறது. இக்கடைகளில் பொருட்களை வழங்குவதற்கு பணியாற்றிய பணியாளர்கள் கூட மக்கள் மத்தியில் பேசப்பட்டவர்களாகவே இருந்திருக்கிறார்கள். ஒரு குடும்பத்தில் நல்லது கெட்டது நடந்தால் அவற்றுக்கு தேவையான பொருட்களை தாங்களாகவே சேகரித்துக் கொடுக்கும் பண்பு இவர்களிடம் இருந்திருக்கிறது. ஒரு குடும்பம் ஒரு கடை பாவனை என்ற அளவில் அக்காலத்து வாழ்க்கை முறை இருந்ததால்தால் செலவீனங்கள் அதிகம் இல்லாமல் சேமிப்பு முறை அக்காலத்தில் அதிகமாக இருந்திருக்கின்றது. இப்போது இவ்வறான கடைகளை காண்பது அரிது அப்படி இருந்தாலும் இப்போதும் அதே வடிவில் கடை நடத்துபவர்களிடம் இருக்கும் பழக்கம் மாறுபட்டதாகவே இருக்கிறது. இலாபமீட்டலை மட்டுமே குறியாகக் கொண்டு கடைகளை நடத்தும் முறையே இன்று பெரும்பாலும் காணப்படுகின்றது. அக்கால கடைகாரர்களே குடும்பங்களை நடத்துபவர்களாக இருந்திருக்கிறார்கள். அறிவுரை சொல்பவர்களாக இருந்திருக்கிறார்கள். இக்கடைகளில் நடைபெறுகின்ற சம்பாஷனைகள் பல செய்திகளையும் சுவைகளையும் கொண்டிருந்திருக்கிறது. உறவுகளை வலுப்படுத்தி இருக்கிறது. மனம் விட்டு உரையாடும் இடமாக இருந்திருக்கிறது. பல திருமணங்கள் பொருந்திய இடமாக இருந்திருக்கின்றது. குறிப்பிட்ட இடத்தினை அடையாளப்படுத்தும் அடையாளக் குறியீடாக இருந்திருக்கின்றது. ஒரு காலத்து யாழ்ப்பாணத்து வாழ்வியலை இந்த பலசரக்குக் கடைகளும் அடையாளப்படுத்தி இருக்கிறது. இன்று மறந்து போன பல நினைவுகளை இந்த கடைகள் இருந்த இடத்தால் செல்லும் போது மனதுக்கு ஒரு நெருடலை ஏற்படுத்துகிறது. யாழ்ப்பாணம் தனது பழைய வாழ்க்கை முறையினை தொலைத்துவருகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய கலை இலக்கிய பேரவையின் புத்தக பண்பாட்டுச் செயற்பாடு

இலங்கையின் நீண்டதொரு இலக்கிய பாரம்பரியத்தினை கொண்ட ஒரு இலக்கியப் பேரவையாக தேசிய கலை இலக்கிய பேரவை விளங்குகின்றது. இலங்கை பூராகவும் தனது செயற்பாடுகள் சுமார் ஐம்பது ஆண்டுகளாக மேற்கொண்டு வரும் தேசிய கலைஇலக்கியப் பேரவை ஆடம்பரம் எதுவுமின்றி அமைதியான முறையில் காத்திரமான இலக்கியச் செயற்பாடுகளை மேற்கொண்டு வரும் ஒரு இலக்கிய அமைப்பாகும். யாழ்ப்பாணத்தில் இந்த இலக்கிய அமைப்பு ஒரு வருடத்திற்கு முன்னர் ஆரம்பித்த ஒரு செயற்றிட்டம் தான் புத்த பண்பாட்டு செயற்றிட்டம்

## இலக்கியம்

ஆகும். புத்தக பண்பாட்டினை ஊக்குவிக்கும் முகமாக வடமாகாணத்தின் பல இடங்களில் புத்தக அரங்க விழாக்களை நடத்தி வருகின்றது. நூல்கண்காட்சியோடு ஆரம்பிக்கு இந்த நிகழ்வு எழுத்தாளர்களின் நூல் அறிமுக விழாக்களையும் இந்த நிகழ்வின் ஒரு அங்கமாக நிகழ்த்தி வருகின்றது.

சிறுவர்களை கவரும் நோக்கில் சிறுவர் நாடக அரங்கினையும் நடத்தி வருகின்றது. இன்று இந்த சிறுவர் நாடக அரங்கு சிறுவர்கள் மத்தியில் நல்ல வரவேற்பினை பெற்றிருக்கிறது. ஆடம்பரம் எதுவுமின்றி அமைதியான முறையில் மக்களின் நிதிப் பங்களிப்புடன் நடக்கும் இந்த நிகழ்வில் வாசிப்பு ஆர்வத்தினை தூண்டும் முகமாக தரமான நூல்கள் காட்சிக்கு வைக்கப்பட்டிருப்பதுடன் நல்ல நூல்களை கொள்வனவு செய்யும் முறையும் காணப்படுகின்றது. இதுவரைக்கும் இருபதுக்கு மேற்பட்ட புத்தக அரங்க விழாக்களை வெற்றிகரமாக நடத்தியிருக்கிறது. இன்று இந்த நிகழ்வுக்கு மக்கள் ஆதரவு அதிகரித்து வருகின்றது. யாழ்ப்பாணத்தில் புத்தகங்களை நேசிக்கும் அவற்றினை வாசிக்கும் புதிய தலைமுறை உருவாக்கம் ஏற்படுகிறது. குறைந்த விலையில் வாசகர்களுக்கு நல்ல நூல்கள் கிடைக்க வேண்டும். நூல்கள் வாசிக்கும் பழக்கம் மக்கள் மத்தியில் அதிகரிக்க வேண்டும் என்ற உன்னத நோக்கினை தாய்நிலம் பதிப்பகம் பாராட்டுகின்றது. தன்னலம் கருதாத இவர்களின் இலக்கிய பணியில் தாய்நிலம் பதிப்பகமும் இணைந்து பணியாற்றும்.

## யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற புலம்பெயர் எழுத்தாளர் வேணி சதீஸின் 'கழுகு' கவிதை நூல் வெளியீட்டு விழா

இலண்டன் வாழ் எழுத்தாளரும் 'புலக்கண்' அமைப்பின் நிறுவுனருமான திருமதி வேணி சதிஸ் அவர்களின் 'கழுகு' கவிதை நூல் வெளியீட்டு விழா **26.07.2024** வெள்ளிக்கிழமை யாழ்ப்பாண நூலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. புலக்கண் அமைப்பின் ஊடாக பல்வேறு இலக்கியப் பணிகளை ஆற்றிவரும் வேணி சதீஸ் தம்பதிகள் இலக்கியத்தின் மீது அதிக ஆர்வம் கொண்டவர்கள் திருமதி வேணி ஒரு கவிஞராக பல படைப்புக்களை மேற்கொண்டுள்ளார். இது இவரது இரண்டாவது கவிதை நூல் சென்ற ஆண்டும் யாழ்ப்பாண நூலகத்தில் இவரது 'ஆக்காட்டி' கவிதை நூல் அறிமுக விழா நடைபெற்றது.

வாழ்நாள் பேராசிரியர் அ.சண்முகதாஸ் மற்றும் முனைவர் மனோன்மணி சண்முகதாசின் இணைத்தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பெருமளவானோர் கலந்து கொண்டனர். நூலின் வெளியீட்டு உரையினை கவிஞர் த.ஜெயசீலன் நிகழ்த்தியிருந்தார். தொடர்ந்து பேச்சாளர்களின் வாழ்துரைகள், நயப்புரைகள் என்பன இடம்பெற்றன. நிகழ்வில் வரவேற்பு நடனம், சிறப்பு நடனம் என்பன இடம்பெற்றதோடு சிறப்புக் கவியரங்கமாக கவிஞர் த.ஜெயசீலன் தலைமையில் 'யாரொடு நோகோம் யார்க்கெடுத்துரைப்போம்' எனும் தலைப்பில் கவியரங்கம் இடம்பெற்றது. இக்கவியரங்கில் ச.முகுந்தன், இ.சு.முரளிதரன், ஜங்கரன், கு.றஜீபன் ஆகியோர் தமது கவிதைகளை அளிக்கை செய்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்மம்மாவின் வாசல்

கு.றஜீபன்

**வாசல் 01**

மிகவும்
ஒளிநிறைந்த வாழ்வொன்றிற்கு
எம்மை அழைத்துச் சென்றாய்
கனவுகள் மெய்யாக்கப்பட்ட
கணத்திலிருந்து
உனக்கான பாடல்களையே இசைத்தோம்
எவருக்கும் அந்நியப்பட்டுப் போகாத
உனது சொற்களில் இருந்தன
அன்பின் ஊற்று
நிறங்களை
மாற்றிக்கொண்டவர்களால் கூட
உனது குடிலுக்கு
தீ மூட்ட முடியவில்லை
எல்லோர் உறக்கத்திலும்
நீ விழித்திருந்தாய்
நீ பயணித்த பாதைகளில்
முட்களும் இருந்தன புக்களும் சிரித்தன
வறுமை சுமந்து
வசதி பெருக்கினாய்

இருப்பின் மீதான ஒவ்வொரு அசைவிலும்
புதிய திசைகளைக் காட்டினாய்
வாழ்தலுக்கான அர்த்தம்
உனது
ஒவ்வொரு சொல்லிலும் தெறித்தன
எவரையும் நோகாத உனது மனதில்
எனக்கான இரக்கமே அதிகமாயிருந்தது
எனது பள்ளங்களை நிரவுவதற்காக
உனது கரங்கள் பாரம் சுமந்தன
படியில் இருந்து
பரம்பரை ஆண்டவளே!
இன்று
உனது வாசல்
வெறுமையாகவே உள்ளது
உன்னிடம் பகிரப்படாமலேயே
எனது சொற்கள் அழிந்துபோகின்றன
மாலைநேரத் தேநீரில்
உனது ஞாபங்களே இனிப்பாயிருக்கின்றன
நீயில்லாத வெறுமையில்
நானும் உனது வாசலும்......................!

**வாசல் 2**

நீ விட்டுச்சென்ற வயோதிப மாலையில்
உன் நினைவுகளோடு நான்
பருவம் சுமக்கும் கனவுகளில்
தோய்ந்தபடியே
கிளைகளை நோக்கி வருகிறது பறவைகள்
உனது அந்தரிப்பு அடங்கிய
கணத்திலிருந்து
வெறுமையின் வியாபகத்தால்
விழுங்கப்பட்டேன்
வாழ்வின்
ஒவ்வொரு மூலையிலும்
குந்தியிருந்தாய்
அகப்பட்டதை
அள்ளியபடியே ஓடிய
யுத்த அவலத்திலும் நீயிருந்தாய்
இன்னும்
உனக்கான இடம் ஒவ்வொன்றிலும்
உன்னையே நினைத்திருக்கிறோம்
நீயில்லாத உனது வாசல்
பலசொற்களை
என்னிடம்
விட்டுச்சென்றிருக்கிறது

**வாசல் 03**

துயரம் வழிந்து போகும் இரவில்
உண்மை பற்றியதான குறிப்புக்களை
எழுதிக்கொண்டிருக்கிறேன்
சபிக்கப்பட்ட பிறப்பில் நானும்
ஆசீர்வதிக்கப்பட்ட பிறப்பில்
நீயும் இருந்தாய்
புழுதிபடர்ந்த மண்ணின்
ஓலைக்குடிசைக்குள்
உனது ஆத்மா சரீரம் எடுத்தது
ஏழ்மையிலும்
இனிமையாய் இருந்தாய்
வரங்கள் பொழிவதற்காய்
தேவதைகள் காத்திருந்தனர்
இருந்தும்
முயற்சிவிதை மட்டுமே
போதுமென்றாய்
பாவப்பட்டவர்களுக்காய் அழுதவளே!
தீப்பிளம்புகள்
மண்ணைச் சுட்டபோதும்
வேர் அறுந்ததில்லை
ஆகாயம் கொடுக்காத அன்புமழை
உன்
ஆனந்தத் தாலாட்டில் இருந்திருக்கிறது
இனி!
எங்கே தேடுவேன்
இன்றும்
உனது வாசலில்
உன் நினைவோடு நான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிருபா லேணர்ஸ்

## KIRUBAA LEARNERS කිරුබා ලර්නර්ස්

அரச அங்கீகாரம் பெற்ற வட மாகாணத்தின் முதல் தர கனரக வாகன பயிற்சிப் பாடசாலை.

- வெளிநாடு செல்லவுள்ளோருக்கு விரைவில் சாரதி அனுமதிப்பத்திரம் மற்றும் சர்வதேச சாரதி அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொடுக்கப்படும்.
- எழுத்துப்பரீட்சைக்கு விசேட வீதி ஒழுங்கு வகுப்புக்கள்.
- அசோக் லேடன் பஸ் மூலமான கனரக வாகனப் பயிற்சி.
- மும்மொழியிலும், உங்களுக்கு விரும்பிய நேரங்களிலும் வாகன பயிற்சிகள்.
- சகல கிளைகளிலும் பயிற்சி வகுப்புக்கள்.
- தவணைமுறைக் கட்டணங்கள்.
- சாரதி அனுமதிப்பத்திர அட்டைகள் விரைவாக பெற்றுக்கொடுக்கப்படும்.



### தலைமையகம்

226, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 4353 / 0777 22 5292



### கிளை அலுவலகங்கள்

| | | |
|---|---|---|
| சுன்னாகம் 021 224 2022 | நெல்லியடி 021 226 0700 | பருத்தித்துறை 021 226 1100 |
| சித்தங்கேணி 021 225 2500 | ஆவரங்கால் 021 222 6688 | யாழ். கச்சேரி 021 222 6699 |
| விஸ்வமடு 021 320 1515 | பூநகரி 077 120 5576 | சாவகச்சேரி 021 227 0700 |
| மன்னார் 023 225 1656 | கிளிநொச்சி 021 228 5505 | வவுனியா 024 222 7777 |






**அ.கிருபாகரன்**
அதிபர், கிருபா லேணர்ஸ்.
தலைவர் 2024-2025, சுன்னாகம் பாரம்பரிய றோட்டறிக் கழகம்.
உறுப்பினர், சர்வதேச மனித உரிமைகள் ஆணையம்.
0777 225 292
Email: kirubalearners@gmail.com
Facebook: fb.com/kirubagaran03


இச் சஞ்சிகையானது தாய்நிலம் பதிப்பகத்தினால் காங்கேசன்துறை வீதி, நியூ எவகிறீன் அச்சகத்தில் 09.08.2024ம் திகதி அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org